293

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நூறு நாமா.

காயற்பட்டணம்,

சீறாப்புராணத்தை

உமறுப் புலவரவர்கள்

பாடி விட்டதிலிருந்து, முழுமையும் பாடி முற்றுவித்த

பனீ யஹ்மது மரைக்காயர்ப் புலவர்

அவர்கள் குமாரராகிய

செய்யிதஹ்மது மரைக்காயர்ப் புலவர்

அவர்கள் பாடியது.

3 AUG 1958

இஃது

MADRAS

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாம் பதிப்பு.

1953

Q7: 414
N53
171056.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நூறு நாமா.

காயற்பட்டணம்,

சீறுபுராணத்தில்

உமறுப் புலவரவர்கள்

பாடி விட்டதிலிருந்து, முழுமையும் பாடி முற்றுவித்த

பனீ யஹ்மது மரைக்காயர்ப் புலவர்

அவர்கள் குமாரராகிய

செய்யிதஹ்மது மரைக்காயர்ப் புலவர்

அவர்கள் பாடியது.

இதனை

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாம் பதிப்பு.

1953

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நூறு நாமா.

காப்பு—விருத்தம்.

உலகெலாம் போற்றிசெய்யு முயர்புகழ்நபியுல்லாமேல்
நலமிகு நூறுநாமா நானெடுத் தினிதுபாட
வலுமையும் புகழுஞ் சேர்ந்த மறைப்பொருளாக நின்றோர்
பலபல வுயிர்கள் யாவும் படைத்தவோர் முதல்வன் காப்பே.

கடவுளர் துதி.

தொங்கலென்று வழங்கும்,

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வானிற் கடலினிற் குறு ஷறுசில் வனத்தினி லுய ராகாயத்திற், றூனப் பதியினின் மற்றுமுள்ள தலங்கண் முழுதினு மெந்நாளுமே, கானும் பூவும்போற் பாலிலாடை கலந்தவுவமைபோற் சற்றேனுமோ, ரீன மணுகாம னிறைந்த சோதி யிறையோன் றனைப் போற்றி செய்கு வாமே. 1

சீத மிகுந்தசெந் தேன் பொழியுஞ் செய்ய கமலம்போற் செவந்த வடிப் பாதந் தரையினிற் சற்றும் படாப் பகர வரிதான மெய் நிழலுஞ் சோதி மிகவாகச் செறியுகின்ற சுடரானவை யெல்லா நிகரொவ்வா தார், நீதியுடன் மலஞ் ஜலமுமில்லா நீண்ட முஹம்மதைப் போற்றி செய்வாம். 2

இருகண் வாய்நாசி செவியுடல மியம்பும் பொறியைந்துந்தா னடக்கி, யரிய புகழாலே மிகவும் போற்றி யழகிய தீனை நேராகவே, தரையில் வளர்ந்தோங்கிப் படரச்செய்தோர் தன்ம மிகவுளர் பலருக் குமே, யருளு நபிமார்கள் பாதமல ரன்பாக நித்தம் புகழுவாமே. 3

கடலுற்றுலகுடன் விசும்புமுதற் கவின விளக்கிய கதிரிரவி, யுடலிற்றிருநாமம் பொறிக்கப்பெற்றோருவகை யுடன்வாயிற் கலலொதுக்கித் திடமோ டொருவனைத் தொழுவதல்லாற் சிந்தித்தொரு வினும் பேசாதவ, ரடல்சேரபூபக்க ரென்னும் வள்ள லழகார் கமலத்தாள் போற்றி செய்வாம். 4

பிறர்தா ரந்தனை நோகினதாற் பெற்ற புதல்வனை யுலகமுற்று மறிய வலக்கழித் தடித்துடலி லாவி தனைச்சொர்க்கம் புகுதச்செய்தோர், மறையி னெறியாகத் தமதுதந்தை வாராதாலவர்தமை வதைத்தோர், செறியு மிரவியைக் கலங்கப் பார்த்தோர் செம்ம லுமறினைப் பணிகுவாமே. 5

கத்தன் மறைபுறுகானைமனக் களிப்பா லொருசேகரமதாகவே முற்றுங் கோவைசெய் துலகிலுள்ள மூமினனவ ரவரவர்கள், மற்றுமுளபேர்கள் ஜின்களுமே வாய்ப்பாக வோதிப் பாடமிட்டுக், குற்றமில்லாதநீன் படிநடக்கக் கொடுத்த உதுமானைப் பணிகுவாமே. 6

ஓங்கு முந்நூறு முழமாகவே யுடலம் வளர்மல்ரகு முல்க்கென்பவ, னேங்கிப் பதறவே யவனை வென்றோ ரேரு பூமியு மொரு வீச்சினற், றுங்குங் கரவாளாற்றுன் வெட்டினோற் தம்பி ரான ருண் மிகவும் பெற்றோர், வேங்கைப் புலியெனும் வேடம் பெற்றோர் வெற்றி யலிபதந் துதிசெய்வாமே. 7

அட்ட திசைபோற்றுஞ் சிபுரீலெனு மமரர் மடிமீதிலிருக்கப் பெற்றோர், தொட்டி லவர்கையா லாட்டப் பெற்றோர் சுவர்க்கக் கனியதுந் தின்னப் பெற்றோர், வட்ட மதிதனை யழைத்தேவினோர் வள்ள லிறஸூல் தந்திரும் பேரனார், மட்டார் புகழ்சொர்க்கத் துகிலுடுத்தோர் வள்ள லஹுஸைன் பதம் பணிவாம். 8

செய்யுந் தவத்தினின் மிகுந்ததவஞ் செய்து கலிமாவை யுள்ளகத்தில் வெய்ய பலனுற வைத்தீமானை விளைத்துத் தினந்தோறும் வளரச்செய்தோர், வையந் தனிலிருந்துயிருடனே வல்லோ னருளினற் சுவர்க்கமெனுந், தூய்ய பதிதனிற் புகுதப்பெற்ற துறவோர் பதின்மர் தாட் பணிகுவாமே 9

எங்கள் முஹம்மது நபியுல்லாதம் மேத்தமுள அஸ்ஹாபிமாரைச், சங்கை யுளவொலி மார்கடம்மைச் சமரிற்பொருமசு ஹாபிகளையெங்கும் புகழ்பெற்ற ஷெய்குமாரை யிறைவனருள்பெற்ற தீனோர்

களைத், துங்க மிகுமூமின் முஸ்லிம்களைத் துய்ய பெரியோரைப் பணிகுவாமே. 10

ஸாலிற் றுய்வயிற் றிருக்கையிலே துட்டப் பெரும் பூதந்தனைக்கண்டு, வாலப்பிராயமாய் வெளியில் வந்து வாளா லதைவெட்டி வதைத்தோர்கரு, மாலவிழியினா ளொருத்திகொங்கை யறவே காணா மற் போக்கிப்பின்னு, மேலோனருளினால் வாவழைத்த மீரான் முஹியித்தீன் பதம் பணிவாம். 11

யவையடக்கம்.

படித்த கவிக்கலை வாணர்முன்னே பாடவேயானுந் துணிந்தது தா, னிடித்த இடிக்குமுன் சிற்றெறும்பொன் றெதிர்த்து மூச்சு விட்டது போலவும், வடித்த ருதவெண்ணிலவு முன்னே வாயங் கொண் மின்மினி தன்னுடைய ஜடத்தி னொளியினை யெதிர்ந்து காட்டுந் தன்மைபோலவு மாகுந்தானே. 12

ஆக்கியோன் பெயர்.

வகுதை நகர்மீதி லிருந்துவாழும் வள்ளல் ஜமாலுத்தீன் பெற்ற மைந்தன் சகல கலை கற்றும் புகழும் பெற்றோன் சங்கையாகினோ னறிவுகளி, னிகரில் சுலையுமா லெப்பைசேய னித்யகல்யாண அஹூமதென்றும் புகழுந்தோன்றல்செய் தஹூமதென்னும் புலவனிக்கவி பாடினனே. 13

நூல்முகம்.

சுல்தான் முஹம்மது காசிமுக்குச் சொல்லினாரிமாம் ஹஸ்ஸாலியார், பெலத்த மறைதேர்ந்து நூறுநாமம் பெரியோ னருளினாலுரை செய்தீந்தார், நிலத்தி லவரவர் வைத்திருந்தார் நேசமுடனதை வாங்கியான்தான், னலத்தி னுடன்கவியாகப்பாடி நவின்றே னெவர்களு முணர்ந்திடவே. 14

கனக்குங் கருத்தான நாயனவன் கவல வரிதான வலுப்பமுள்ளோன், றனக்குட் டானாக நலமுமாகத்தானே யிருந்தன னெதுபோலென்றாற், செனிக்கும் வித்தினின் மரமானது சேர்ந்தங்கொளித்திருந்தன போலவு, மினித்தபாலுக்கு ணெய்யொளித்தங் கிருந்தபோலவு மிருந்தனனே. 15

இன்னபாங்கினி லிருக்கும்போதி லியல்சேர் வலுப்பத்தையுடைய
நாயன், றன்னிலிருக்கின்ற அந்தரங்கந் தன்னைப் பிரசங்கஞ் செய்ய
நாடிப், பன்னவரிதான வுண்மையாகப் பகிர்ந்தங் கனந்தமா யொளி
விரித்தான், அந்த வொளியது டாங்கைந்தாகி யழகுந் தெளிவு மாய்ப்
பிரிந்ததுவே. 16

எண்ணி லடங்காத சுடர்களேனு மிதற்கு நிகரில்லா வொளி
யாமென்றுங், கண்ணை மழுக்கிடு மலுகருவாங் கவினவொளியினிற்று
லங்கிற்றதை, வண்ண மறைப்பொரு டிருக்கலை வாகாய் நோக்கியே
யிவைகளெல்லாம், புண்ணியம் பெற்ற வென்னடியா ரென்று புகழ்
நதங்ஙன் கிருபையாளன். 17

அஞ்சு பங்காகப் பிரிந்தவொளி யாறுபங்காயிற் றதன் பிறகு,
துஞ்சலணுகாதா னதிலாசையைத் தோயக் கொழுத்தின னிருபங்
காச்சு வஞ்சிச் சுரூபமாய்ச் சொருபிரிவு மற்ற வொருபிரி வாணயிற்று,
விஞ்சு மாணொளி யஹ்றமதென்றும் விளங்கும் பேர்வைக்கப் பட்
டதுவே. 18

மோகப்பெண்ணுரு வொளிவுக்குப்பேர் முஹம்மதெனவைக்கப்
பட்டததி, லாகம்விரும்பியே யஹ்மதெனு மாணமொளியை நான்
காய்ப்பிரித்து, வாகு செறியொரு பங்கொளிவால் வணக்கந் தனக்
குத்தா னிலையாகிய, தேகம் பெறுகின்ற எக்கினென்னுஞ் சிறந்த
மாத்தினை இறைவகுத்தான். 19

தாளம் பொன்வெள்ளி பவளம்விலை சாற்ற வரிதான மாணிக்கமு,
மரகதமிந்த வகைகள்கொண்டு மாத்தைப் படைத்ததைத்தலை கீழா
கத், தெரியத் தூக்கிவைத் தான்பெருப்பந் தெரிய முடியாத மறைப்
பொருளோன், ஒருவ னறிவதேயல்லாதுமற் றொருவர் தானுமே
யறியொணாதே. 20

அந்த மாத்திலை முழுதினமே யதிக தவுறுத்து வேதமதை,
விந்தை விந்தையாய் வரைந்திருக்கு மேலானமூசா நபியுடைய, சொந்த
வழிபாடாம் பூக்களெல்லாந் துய்ய சபூறெனும் வேதமதை, யந்தம் பிறக்
கவே வறைந்திருக்கும் மதுதான் தாவூது நபிவழியாம். 21

காயி னெழுத்திலா மிஞ்ஜீல் வேதங் கருணை நபிஈசா வழியா
மது, வாய் விலாசமா யுண்ணுங்கனி வாய்த்த புறுக்கானை வரைந்
திருக்கும், நாயனருள் பெற்ற நம்மிறஸூல் நயினார் திருவழி யாகு

மது, தூய பணறுக ளுள்ளதெல்லாம் துங்க நபிமார்கள் வழியா குமே. 22

ஆதம்சீதுநூ ஹிபுறுஹீமு மதிகஇதுரீசு நபிபோல் மற்றத், தூதர்வழி யாகு மிந்நபாங்கிற் றுலங்கரித் தம்மாத்தை, எதுமறவேதா னுண்டாக்கின னிரண்டாம் பங்கொளி வதனைக்கொண்டு, சிதப் புனலூறு நான்குமூலே சேர்ந்த கிணறொன்றை யிறைவகுத்தான். 23

முத்து மரகதம் பவளம் விலே மூவாத செம்பொன் னிவைக ளெலா, மெத்தச் சிறப்பான கல்லாகவே மேவ அதில் வைத்துக் காட் டியபின், அத்தன்கஸ்தூரி பனிநீரின லழகாய்க்கரைத்து நீ ராகவே தான், வைத்துப் பூசியே துலக்கமாக வகுத்தா னொருதிரு வல்ல வனே. 24

மூலேநான்கினும் குமிழிநான் குமுதலோன் படைத்தனனொரு குமிழி, பாலாந் தேனொரு குமிழியாகும் பனிநீர் கஸ்தூரி யம்பரு டன், சால வருமொரு குமிழியினிற் றண்ணீர்க் குமிழியோ டிந் நான்குமே, மேலாடி யொன்றை யொன்றுகூடி மேவிப்பாந்தோடினது மிலேயே. 25

இந்நான்கு மூலே யொவ்வொன்றினுக் கிடையி லேந்நூறு வரு டத்தூரம் அந்நான் கினுநான்கு மலக்குகளே யமைத்தே யதில் நீங்கள் போயிறங்கி, நன்னேருடலுலூச் செய்துகொண்டு நாடிய தின்முங்கி முக்குளித்துச், சன்னேயதினிலு மென்றேவினன் றக்கமறையினுக் குரியவனே. 26

இறங்கி மலக்குக ளப்படியங் கிதய மகிழ்வாக வுலூச்செய்து பின், கறங்கு குமிழியில் முழுங்கி நின்று கத்தாவருளினுல் நிற்குநோ மரங்கள் மிகத்தருங் காரணங்க ளநேகமதிற்கண்டு வாய்திறந்து, நிறங்களினதென வறியொணுத நெடியோ னிடத்தினிற் செப்பு வாரே. 27

எங்கள் தனேப்படைத் தாளுகின்ற விறையேயாமிந்தக் குமிழி யிலே, முங்கி யதிற்கண்ட காரணங்கள் மொழிந்து விண்ணப்பஞ் செயப்படாதென், றங்கம் பூரிப்பக் கேட்கின்றூர்க ளப்போதிறையவன் புதுமையின்னம், பொங்கி மிகுதென்று னப்புதுமைபொலி வாய்க் காட்டென்றூர் மலக்குகளே. 28

இன்ன மொரு மூன்றாகும் பங்கொளியா லேத்த முளகிந்தீற் குப்பிதனைப், பொன்னி னான்முத்தான் மாணிக்கத்தாற் பூணும் பவளத்தான் மரகதத்தான், மின்னிற் றுலக்கமாய்ச் தூண்டாமணி விளக்காமிரவெலா மகன்றோடவே, அன்னையிணைதுணை யில்லாதவ னழகு மிகவாக வமைத்தனனே. 29

பிறித்தநான்காம் பங்கொளிவைமட்டும் பெரியோன்றிருமுன்னே நிறுத்திக்கொண்டான், திறந்தபெண் சுரூபத்தொளியைத் தேடக் கிடையாத பஞ்சவன்ன, முறத்தேகம் பெற்று வடிவும் பெற்றங் குயர்ந்த புகழுமே மிகுதிபெற்று மறுதாண ணுவுமில் லாதபச்சை மயிலாய் வகுத்தனன் மறைப்பொருளே. 30

தங்கமதின் தலை கண்மாணிக்கந் தயங்குங்குங்குமமதினலகு, வங்க மிருஞ்சிறை பொடிச்சிறகு வாய்த்தமரகதங் கால்பவளந், தூங்கமிருந்த வால் வயிரத்தினார் துலங்கு முத்திரை தானுண்டாக்கிக், கொங்கு கமழுமம் மயிலுக்குப்பேர் கொடுத்தான் தாவூசென்றொருநாமமே. 31

பச்சை மயில்தனை யின்னபாங்கிற் படைத்த பின்னிறை யதனைப் பார்த்தென், னிச்சை முஹம்மதே தாவூசே நீ யிங்கே வாவென வழைத்துச்சொல்வான், மிச்சமாகிய வென்கிருபை மேவு மயிலே நீ யென்னொளியிற், சொச்சமிருப்பதை விழுங்கெனவே சொன்னானுடனே தான் விழுங்கியதே. 32

சிறகை யாசாரத் துடன் விரித்துத் தின்று விழுங்கின்ற வேளை யிலே, மறுவி லொளிதொண்டைக் குழியினின்று வண்மையுடன் லாஇலாஹவென்று, திறமோ டுரைத்தந்த மயிலுமப்போ செப்பிற் றில்லல்லா ஹ¬வெனவும், பிரபை யுடனங்கே நிற்கயிலே பெரியோன் மயிலைப்பார்த் தியம்புவானே. 33

எனது கிருபையாற் றாவூசென்னு மியல்சேர் மயிலேயுன் றனக் கிப்போது, தனது துணையாகப் பறவைநான்கு தன்னைப்படைத்து நான் றாவோவென்றான், மனது மகிழ்ந்துதா னல்லதென்று மயில் தான் வாய்திறந் தாண்டவனே, நினது கருணையாலப்படியே நீ தான் படைத்தரு ளென்றதுவே. 34

ஆந்தை வல்லூறு காகங்கோழி யமைத்து மயிலுடன் கூட்டி வைத்து, வேந்தனாகிய மறையோன் சொல்வான் மிக்கதாவூசே யுனக் கிந்நான்கு, வாய்ந்த பறவைகள் குஞ்சாகவுமாதா வதற்கு நீ யாகவுமே,

சேர்ந்திப் போதானே யெக்கின்மரந் தேடிப் பறந்துபோயிருங்க
ளென்றான். 35

பக்கியொருநான்கு மயிலுமாகப் பாரமரமெக்கின் றன்னிலேகி,
ஊறக்கனருளினாற்றரிபட்டடந்தக் கவினார்மரத்தினி லுண்டாகிய, மிக்க
விலைபூகாய் கனிமரத்தின் மேவும்பதார்த்தங்க ளனைத்தையுமே,
துய்க்கவெனமோந்தங் கடிக்கடியே துணிந்து தினந்தோறுந் திரிந்
ததுவே. 36

வந்தநாடோறு மோந்துபார்த்து மயிலுமிப்படித்திரியும் நாளில்,
அந்தமிலிதாவூ செனுமயிலே அரிய மரத்தினி லுண்டாகிய, கொந்து
மிலைபூகாய் கனிமற்றுள கோதில் பாதார்த்தங்க ளேதுண்டதில்,
எந்தப் பதார்த்தமுன் றனக்குவேண்டு மிச்சை யானதைப் புசி
யென்றானே. 37

பொருளே முதலோனே யெனக்குணவு புசிக்கக் கனிவேண்டு
மென்றுமயில், அரிய வாய்திறந் திசைக்கக்கேட்டங் கந்தக் கனியைநீ
யெந்தநாளும், பிரிசத்துடனேதான் றின்னெனவே பெரியோன் பகர்ந்
தன னப்படியே, பருகியுடலகம் பூரிக்கவே பருத்துக் கொழுத்துத்தா
னிருந்ததுவே. 38

கனியைப்பருகியங் கிருக்கும் நாளிற் கத்தா விடத்தினின் மயி
லொருநாட், டனிய முதலோனே யெனக்கு மெத்தத்தண்ணீர் தவிக்கு
தென்றுரைத்ததப்போ, நினைவி லிறையவன் மரந்தனிலு நீண்ட கிணற்
றிலும் புசிக்கத்தக்க, வினிய பதார்த்தங்க ளுள்ளதெல்லா மிந்த மயி
லுக்காய்ப் படைத்தனமே. 39

அந்தப் பதார்த்தத்தை நாமிதற்கிங் கருளுமுன்னமே பொறுதி
யின்றி, இந்தமயிலப்புனல் கேட்டதினி யிதற்குமதியுமே பொறையு
மவர், முந்தவருத்தஞ்செய்ததின் பிறகு மோட்சங் கொடுப்போ மென்
றக்கிணற்றைச், சந்தித்ததில் முங்கி நீர் குடிக்கத் தனியோன் மயிலினை
யேவினனே. 40

விரைவிற் பறந்தந்த நீர்க்குமிழி மீதின் முங்கியே நீருண்ணுமற்'
பெருக வதிலுள்ள காரணத்தைப் பிறக்குக் கண்ணினாற் கண்டு
மெத்தப், பரிவாயுடல்பூரித் தெழுந்து விண்மேற் பறந்துமுன்னமே
தானிருந்த, தருவைநாடியே வருகையிலே தனியோன் றருவே நீ
மறைந்தே கென்றான். 41

கண்ணிற்காணுமல் மாமறைந்து கரந்துபோனதை யறியாமலே, புண்ணுய் வருந்தியே பறந்துதேடிப் பொருளும் வல்லமை யறிய நாடி, யெண்ணினுராய்ந்து லட்சமுப்ப தியம்பும் வருடமட்டும் பறந்துந் தண்ணமாகிய மரங்காணுமற் றறிந்து சிறகெலா முதிர்ந்தனவே. 42

உதிர்ந்த சிறகெலாந் தசைகள்தோன்ற வுலர்ந்து வருந்திய வேளையிலே, கதங்களனுவிலா தொருமுதல்வன் ககனேர் தமைக்கூவி வானேர்களே, முதிர்ந்தவென்னது கருணைசேர்ந்த முஹம்மதெனுந் தாவூ செனுமயில்தான், மதங்க ளொடுங்கியே மெத்தமனம் வருந்திப் பதறியே மெலியினிகாண். 43

நீங்களெனதொளி யானகிந்தீல் நிகரிலாக்குப்பி தனைக்கொடு போய், ஆங்கு மயில்மெத்த வருந்திருக்கு ததனைமேடையா யதின் முன்னமே, தாங்கிப்பிடியுங்க ளென்றேவினன் சடுதிபிடித்தன ரம் மேடையிற், றீங்கொன்றணுகாமற் போயிருந்து தேகவருத்தங்கள் போக்கினதே. 44

கிடைத்தவாசனத் திருந்தபின்பு கிளர்ந்தமயிலது தன்னுடலைத், திடத்தினுடனேதா னுற்றுநன்றுய்த் தெரியப்பார்த்தன சிற கொடிந்து, மடுத்தாரக்குடற் றசையைக்கண்டு வருந்திமெலிந்தது மறுபடியுங், கொடுத்தான்சிறகினை மிகப்பெலத்துக் கொண்டுமயில் பின்னும் பறந்ததுவே. 45

ஒருமூன்று லட்சம் வருடமட்டும் முயரப்பறந்துமெக் கினெனன் றிடுந், தருவைக்காணுமல் வருந்துநேரந் தனியோனெருதிரு மலக் கைக்கூவி, வரிசையாகிய தாவூசெனு மயில்தான் வருந்துது நீர்போயுந்தம், சிரசைப்பணிந்ததின் முனிலுமென்றுன் சிறந்த மலக்குப் போய் நின்றனரே. 46

நின்ற மலக்கவர் தலையின்மேலே நேசமுடனிருந் திளைப்பாறியே, வென்றியுளநாயன் குறுணயத்தை மேலோன் கருணையால் மயிலினுக்கு, நன்றிபெறவே தோற் றரவாக்கினு னுவாலதையெதி ராகத் தோடே, யன்று பினும்பறந் தம்மரத்தை யாதி யருளினுற் கண்டதுவே. 47

பூவுங்காயுநற் கனியுமெத்தப் பொலிவாகவுண்டா யிருக்கவதிற், றாவிப்பறவையோர் நான்குங்கூடிச் சோர்வற்றிருக்கவும் கண்டதிலே, தாவிப்பறந்துபோ யிருந்துமுன்போற் றண்டாங் கனிய துண்டே

சுகித்து, மேவியிருந்தன விருக்குநாளில் மேலொன்றனை யொரு
நாளைநோக்கியே. 48

ஏகபெரியோனே நின்னேவலா லிந்தக்கிணற்றினி னீர்குடித்
துத், தாகமகற்றிடச் சென்றதனுற் சகலபுதுமையு மதிற்கண்டுதான்,
மோகம் பெருத்தெகீன் மரத்தைத்தேடி மூவை வருத்தப்பட்டது
தானென, ஆகமுடனரு ளென்றுகேட்க வாதிபெரியவ னியம்
புவானே. 49

மட்டில் நிகுமத்தை யுனக்காக நான் வகுத்தேனிருக்கயி லென்
னேவலை, விட்டு நீமுந்த நீர் கேட்டதால் விக்கினஞ்செய்தே னெனது
டைய, கட்டளையான பொறுதிமதி கனக்கசபூறுமே வருகவென்
றூன், இட்டமினிமேல் நானுன்னுடைய வேவலனறிவாய் திறக்கே
னென்றே. 50

முன்னே தனதிட மெனதுடைய மோகவமானித மிருக்கின்றதை,
இந்நேரந்தா வேண்டுமென வேகபெரியவ னியம்பிடவே, பின்னரெனத்
தடை சொல்லாமலே பிறங்குமுன்னமே விழுங்கொளியை, அந்நேரங்
கக்கி யிறைதிருமுன் னழகு முத்தாக வைத்ததுவே. 51

துய்யவொளிதனை யிறைவன் பார்த்துச் சுஜூது நீயெனக் கன்
பாகவே, செய்யென்றேதினு னப்படியே சிறப்பாகப் போற்றித் தொழு
ததுவே, பொய்யலவெந்த ஞட்டந்தேட்டம் பிறப்பும் புவியிலே நின்ன
ளவி, லையமறச்சொல்லி மலக்குகளை யாளும் பெரியவ னழைத்துச்
சொல்வான். 52

கூவறனிலெழு குமிழிநான்கிற் கோதில்லாதிந்த முத்தை நீங்கள்,
மேவக்கழுவுங்கள் வருடநான்கு விளையுமட்டென விளம்பிடவே, யாவ
லுடனேதான் கழுவினுர்க வதன்பின் ளறிவெனுங் கடன் மீதிலுங்,
தாவிப் பொறையெனுங் கடன்மீதினுஞ் சங்கையா மெனுங் கடன்
மீதினும். 53

காசொன் றணுகாம லுண்டாக்கிய ஹக்கென் றுரைக்கின்ற
கடன் மீதினும், பேசமுடியாத திக்கிறென்னும் பெரிய கடலினு நிகுமத்
தென்னும், வாசக்கடலினு மொளிவெனும்பேர் வாரிக் கடலினுந் தீர்க்க
மாக, மோசமறக் கொண்டு சென்று சென்று முத்தைக் கழுவினுர்
முறையாகவே. 54

வருட மெழுபதி னுயிரம்பேர் மட்டுமொவ்வொரு கடலின் வைத்துத், திறமாய்க்கழி இயினு ரிறைதிருமுன் சிறப்பாக வைத்தார தின்பிறகு, பொருவு மணிவிளக் கானகிந்தீற் பொற்பாங்குப்பியிலந்த முத்தை, மருவவதில் வைக்கச் சொல்லியேவினுன் வல்லோன் மலக்கு கள் வைத்தார்களே. 55

வைத்தறாஹூக ளெல்லாத்தையும் வாவென் றழைத்தந்தக் குப்பிதனைக், கத்தன் பிதற்கணம் வரவேவினுன் களித்துப் பிதற் கணம் வந்தனவே, முத்திளுெளியினிற் சற்றெடுத்து முதலோன் கருணையா லோராசன, மெத்த வழகாக வுண்டாக்கினுன் விளம்ப வுவமை யொன்றதற்கரிதே. 56

கட்டு மாசனந் தனக்குத்தளங் ககன மதிளன வோங்கிடவே, நட்டுங் காலெல்லாஞ் சிறப்பாகவே நல்ல மரகதந் திருவபிர, மிட்ட கதவுதாள் நிலைகளெல்லா மிலங்கு மரகதம் பவளமுத்து, விட்டுப் பனிநீருங் கஸ்தூரியும் வீரச் சுதைபூசி முடிந்ததுவே. 57

அடங்கா வொளிமுத்தி னுெளியதனி லள்ளிப் பின்னுஞ்சற் றெடுத்ததனுல், நெடுங்கா ரணங்களு மிரணங்களு நிகரில் விதம்வித மாய் வகுத்து, மடந்தை மகசுற்றந் துணையிணையும் வழுத்தும் பிறப் பிறப் பொன்றுமில்லான், தடஞ்சே ராசன மீதிருந்து தாவூசெனு மயிலினைக் கூவினுன். 58

அஞ்சி நடுங்கியே மயிலன்னை மாதி திருமுன்னே யோடிவந்து, நெஞ்சி னுடன்வாக்கு மனமுமொன்ருய் நெடிது போற்றிய தொழு திறைச்சி, வஞ்ச மறநின்ற தென்கிருபை வாகான தாவூ செனுமயிலே யஞ்ச லெனச்சொல்லி மனதைத்தேற்றி யாதி முதலவ னருளிச் செய்தான். 59

என்னு சனந்தனைக் கூடாக்கி நீ யிந்தத் திருமுத்தை முட்டை யாக்கி, நின்னு கந்தனி லொருநினைவாய் நினைத்தங் கனைத்தடை கிடவெனவே, சொன்னு னதுகேட்டு நல்லதெனச் சோதித் தரளத்தை யனித்துக் கொண்டு, ப்ன்னுட் கிடந்தன வதின் பிறகு பச்சைமயிலைப் பார்த்தே யோதினுன். 60

முட்டை தனையினி மயிலேயென்முன் மோக முடன் வைத்துப் பார்த்திரென்ருன், மட்டிலடங்காத புகழ் சேர்கின்ற மயில்தானன் பாகப் பார்த்திருந்த, தெட்டு சுவர்க்கமு நமக்கருளு மேகன் கோப

மாய் மயிலைப் பார்த்தான், சட்டம் பதறியே நடுநடுங்கித் தலர்ந்த வேர்வைகள் பிறந்ததுவே. 61

வல்ல மயிற்சிர மீதிருந்து வாகான வேர்வை நான்கு துள்ளி, மெல்ல விழுந்தன வதனைக் கொண்டு விண்ணோர்க் கரசான ஜிபுரீலை யும், நல்ல புகழ்மீக்கா யீல்தமையும் நன்மை மிகுமிசு ருபீலையும், கொல்லுந் தொழிலிசு ருயீலையும் கோமான் படைத்தன னந் நேரமே. 62

அதன்பின் முதலவன் கிருபையின லந்த மயிலையன் பாகப் பார்த்தான், பதறித் தடுமாறித் தட்டழிந்து பயந்து நடுங்கினததன் மெய்யுனி, லுதித்த மயிர்க்காம்பு தோறும்வேர்வை யொருலட்சத்தறு பதினயிரங், குதித்து விழுந்தன பலதுளியாய்க் கோமானொருவன் றன் குதரத்தாலே. 63

துள்ளி களுக்கொவ்வோர் நபிமார்களைத் துய்யோன் படைத் தனன் மறுபடியு, முள்ள கிருபையாய் மயிலைப் பார்த்தா னுடனே மூந்நூற்றுப் பதின்மூன்றென்றும், விள்ளுந் துளிவிழ வதனைக் கொண்டு மேலோன் முறுசலீ னபிமார்களைத் தெள்ளிதாகவே படைக் கலுற்றான் ஜெகமும் விசும்புமே போற்றிடவே. 64

பின்னு மதின் மூக்குத் தன்னினின்று பிறந்த துளிரண்டு விழுந் திடவே, அந்தத் துளிகொண்டு நரகம் சுவர்க்க மதனைப் படைத் தனன தன்பிறகு, கன்ன மிரண்டினி லிருதுளிதான் கவின விழுந்தன வதனைக்கொண்டு, மின்னியெழுமதி யிரவியையும் விளங்கப் படைத் தனன் மேலவனே. 65

வலது செவியின லிருதுளிதான் வாகாய் விழுந்தன வதனைக் கொண்டே, நலவு மிகுகின்ற லவ்குகலம் நாயன் படைத்தன னதன் பிறகு, சலில மிருதுளி யிடதுகாது தன்னி லிருந்துதான் விழுந் திடவே, இலகு குறுசறு ஷதனைக் கொண்டங் கியல்பாய்ப் படைத்தன னிறையவனே. 66

வலது சிறகினின் றைந்துதுளி வாகாய் விழுந்தன வதிலொன்று கொண், டிலைகள் குலைகள்காய் மலருமுள்ள வெழிலார் சிதுறத்துல் முந்தஹாவை, யலகு சிறப்பாக வுண்டாக்கின னப்பாலுள துளி கொண்டு வான, முலக மதிலுள்ள வஸ்துகளு முயிர்கள் பலவுமே படைத்தனனே. 67

எல்லாம் படைத்தபின் மயில்தனையே யேக பெரியவனு னுறுக் கிப் பார்த்தான், வல்லு றாகாகங் கோழியாங்தை மயிலு நீராக வுருகினவே, யல்லானதைப் போக்கி முத்தொளிவுமாகித் திரண்டொரு முத்தானதே, வல்லோ னதினின்று நான்கு வஸ்து வகுத்தான் மண் காற்று நெருப்புநீரே. 68

வஸ்து நான்கையும் கலிமாச் சொல்லி மார்க்கந் தனிலாக்கி நாலி லொன்றை, மெத்த வரிதெனத் தெரிந்து கொள் நீ மிக்க வொளியே யன்றிறையேவினன், சித்த மகிழ்ந்துதா னொளியெழுந்து தீய்க்குச் சலாஞ் சொல்லிற் றங்நெருப்புப், புத்தியுடனே தான் பிரத்தி சொல்லப் பொங்குமொளிவின் வாய் விண்டு சொல்லும். 69

அனலே நின்னிடத்தை பிருக்கு தறிவாயோ சொல்லா யென்று கேட்க, வெனது பாலென்ன வைபிருக்கு தென்ன நெருப்புத்தான் சொல்லிய பின், உனதி னுயிர் கொல்லும் நீருயிரை யுண்டாக்குங் காற் றென் றொளிவு சொல்ல, நினது பாலிலே யிலேயோ வென நெருப்புக் கேட்கவே யொளிவு சொல்லும். 70

இப்படிக் கென்னைச் சொல்ல வேண்டா மென்று தவுபாவுஞ் செய் தென்பாலிற், குப்பல் குப்பலாயை யிருக்குங் கொஞ்ச மல மெத்த வுண்டுவேறே, ரொப்பி லாநாயனே பிலாதானென்ன வொளி சொல்லிற் றதனைக் கேட்டு, மெய்புண்டாகிய கலிமாத்தனை வெய்ய நெருப்போதிப் பணிந்ததுவே. 71

வண்மை யொளிவே நீராதிதூதர் மனங்கொண் டறிந்தேனு னென்று போற்றி, யுண்மையாகிய, வழியிலாற்றுடனே யொளி யெழுந் தின்னபாங்கி, னண்ணிப் புனலையுங் காற்றையுமே நயனங் கொடு நோக்கிக் கேட்டிடவே, தன்மை யன்றியே பெருமை வார்த்தை சாற்றி யதன்பின்னே புக்கினவே. 72

பெருமை மொழிமன் தான் பேசாமலே பெரியோன் றூதரை யுண்மை கொண்டு, சிரசு தாழ்த்திரு கைபுங்கட்டிச் செவியைப் பிடித் துடற் றுநெடுங்கிப், பரிவி னுடன் கலிமாவை சொல்லிப் பயந்து நடுங்கியே தலைகவிழ்ந்தே, யருகி னிற்கின்ற போதிலதை யணைத்துக் கொண்டொளி யியம்பிடுமே. 73

துவர்க்க முடிவுக்கு மண்ணே யின்னைத் தூய தெனவேயான் றெரிந்துகொண்டே, னுவப்பு நின்மேலென் றிருக்குதென் றங்கொளிவு

வாய்விண்டு சொல்லியதே, புவிக்குளாதந்தம் மக்களிலே புத்தியகமிய மிகுந்தவர்கள், அவர்க்கு யொருவருக்குத் தீமிஞ்சினலநேக கோப மும் பகிலுமுண்டாம். 74

அடிக்குங் காற்று தான் மிஞ்சுமானு லவர்க்குப் பெருமை யுண்டா யிருக்குங், குடிக்குந் தண்ணீர் தான் மிஞ்சுமானுற் கொல்ல வாலிப வாண்மை யுண்டாம், படிக்கு ளொருவர்க்கு மண்மிஞ்சினுற் பறிந்த பொறையுநேர் வழியுமுண்டாந், துடுக்குக் குணமன்றி நற்குணமுந் தொலையா திருக்குமே யெந்நாளுமே. 75

ஒன்று மிணையற்ற விறையோன் சொல்வா னுதை யாற்சிலற் தமைப்படைத்தேன், கொன்று விடுவேனுன் காற்றினலே குளிர்ந்த தண்ணீராற் சில படைத்தேன், வென்றி யுறுமவ ருயுர்தனையு மீளப் புனலினல் வதைப்பேனென்று, மென்று மெவருக்கும் வேண்டு மென்று மெரியாற் சிலர் தமைப் படைக்க லுற்றேன். 76

எரியாற் படைத்தோறை யங்நெருப்பா லிரக்கப் பிரிகுவேன் மண்ணினலே, யுருகப் படைத்தோர்களாவியையு முலகந் தனைக் கொண்டே ஹலாக்காக்குவேன், இருமென் னொளியினல் முஹம்மதையு மியல்பாய்ப் படைத்தன னவருடைய, வரிசையாகிய செவி யிரண்டு மகிழ்ந்தென் னுசையாற் படைத்தனனே. 77

என் வல்லபமான வச்சத்தைக் கொண் டிருகை மலரையும் படைக்கலுற்றேன்; பொன்மேவிய வெந்தன் குதறத்தினுற் பொருவுங் கனியித முனைப்படைத்தேன். மின்மே விய சொர்க்கத் னன்மாங்கிஷந் தனைத் தக்குபீரால் நானே யழகாகப் படைத்தனனே. 78

கமல மொக்கின்ற காலிரண்டுங் கஸ்தூரி யாலே நான் படைத் தேன், சமனென் றுரைக்கொணு வென்மாணிக்கந் தனைக்கொண்டவர் திரு மனம்படைத்தேன், அமல்கள் மிகச்செய்வோர் புகும் சுவர்க்கத் தாரு லுடனைப் படைக்கலுற்றேன், சிமைய வலிதான வண்மைகளுஞ் சேர்த்துப் படைத்தே னென் முஹம்மதையே. 79

மனிதருடன் ஜின்னு மலக்கவுரும் வண்மையுடன் ருழ்ச்சி செய்ய வேண்டி, எனது குதறத்தாற் படைக்கலுற்றே னென்னை வணங்குதற் காகவுமென், றனை தாதைபிள்ளை சுற்றந்துணை யருந்துமுணவுசாவுறக்க முடன், றுணியு மிவையொன்றி மில்லாததோர் தூய்ய பெரியவனியம் பினனே. 80

எழுப தாயிரம் பூமியைப்பின் னேகன் படைத்ததி னிரம்பி டவே, பழுதொன் றணுகாத கடுகுமணி பரப்பி யதைமுற்று நாளொன் றிற்குச், செழுமையுடனெவ்வொன் றுண்ணவே சிரப்பாய்ப் பரவைச் செய் தக்கடுகை, முழுதுமருந்தினாற் சாவுனக்கு முடுகியிறப்பது சாப மென்றான். 81

அருள் சேரிறையவன் சொற்படியே யந்தக் கடுகை யோர்நாளைக் கொன்று, குருகு தின்றிடக்குறையவந்தக்குருகு மினியிந்தப் படி தின்றோமேற், சுருதி மறையோன்றன் விதிப்படியே துஞ்சி விடுவோ மென் றுளம்பயந்து, பருகி யிருநாளைக்கொரு கடுகு பசிக்கு நாள் மூன்றுக் கொன்றுண்டதே. 82

அஞ்சிப் பயந்திந்தப் பாங்காகவே யருந்தி யதன்பின்னேயப் பறவை, துஞ்சிற் றதுபின்முன் னான்காயிரந்தொகையிட் டெணியா தங் களைப்படைத்து, மிஞ்சும் பெலனுமெய் யவர்கட்கீந்து வெகுநாட் புவியினிற் சுகிகச்செய்து, வஞ்சச்சின முள்ள இசுறாயீல் தான் வந்தே யுயிர்வாங்கி மரிப்பித்தாரே. 83

உலக மெழுபது பினும்படைத்தங் குலக மொவ்வொன்றி லிருந்து வாள்கக், குலவ வெழுபது னாயிரரைக் கோமான் படைத்தவ ரெல்லாத் தையும், கலவி னுடனே தான் பிஸ்மிக்காலினாடி யிருந்தெனைத் தொழுங்க ளென்றான், விலக லகற்றியே யேவற்படி விரும்பி யவரெல்லாந் தொழு தார்களே. 84

அவரி லொருவர்தாம் விருப்பிலாம லசதிமறதியு மாகவேறே கவலை யாகினா ராகையினாற் கத்தனவர்களெல் லாத்தையுமே, தவறு செய்தார்க ளென்று சொல்லிச் சன்னை யறவேதான் பெரியோனுமே, புவியை யிழந்துடலாவி செல்லப் போக்கி ஹறாபாக்கி வித்தனனே. 85

செந்நிறமுள்ள ஆதமொன்று சீரான வெள்ளை யாதமொன்று, பின்னு மிவர்களைத் தான்படைத்துப் பெலனும் ஹயாத்துமே மிகக் கொடுத்துப் பன்னு நெடுநாளைக் கிருக்கச் செய்து பாரின் மவுத்தாக்கி யதன் பிறகு, பொன்னின் பதிக்கேற்ற பனீ ஆதத்தைப் பொற்பாய்ப் படைத்திட இறைநாடினான். 86

நாடிமலக்குக டன்னைக் கூவி நல்லா தந்தனைப் படையுமென்றான், வீடு பெறும்விண்ணோ ராதந்தலை விளங்கப் படைத்திடத் தெரியா மலே, வாடி யிருந்தார்க ளிரண்டாயிரம் வருட மட்டுமே யதின் பிறகு,

தேட வரிதான புகழ்குரியோன் சிரசைப் படைத்துத்தானிறுத்தா னிறுத்தினனே. 87

நிறுத்தி யதன்பின்ன ராதந்திரு நெற்றிதனிலந்த முத்தொளி யைச் சிரசிற் றரித்திடப் பதித்து வைத்தான் தேகம் படைத்தபின்ன பியா தத்தைக், குறித்துத் தொழச் சொல்லி மலக்குகளைக் கோமானே வின னுடனேவந்து, மறுத்த மொழியொன்றும் பேசாமலே வானோ ரனைவரும் வணங்கினரே. 88

அங்கு வணங்கிய மலக்குகளி லஜாஸீலெனுநாம மலக்குமட்டும் கங்கு லகற்றிய நெருப்பினுலே காயம் படைத்தனன் மண்ணினுலே அங்கம் படைத்தவன் லனக்கங்கஞ்சி யவனை வணங்கிடே னெனப் பெருமை, யிங்கு பகர்ந்ததா லிறையேவலை வெறுத்தானரகினுக் குரித்தாகினுன். 89

ஏவல் வறுத்ததால் நாயன்முனி வெய்தி யவனீமான் பழுதாகி னுன், பாவக் கடலினின் மூழ்கிப்போனுன் பாதகனிபுலீ சென்றே தான், மேவுந் துனிபெற்று மூதேவியாய் விண்ணோ ரம்பையர் கடன் மலைவான், பூவும் பழித்திடத் தூரத்தப்பட்டுப் போனுன் பொன்னகர் கிட்டாமலே. 90

பவனி வரவேண்டி நபியாதத்தைப் பச்சை மரகதப் புல்லக் கேற் றிச், செவிய சுவர்க்கத்தில் வானோர்கொண்டு சென்று திசை தோறுஞ் சுற்றிவந்தே, நவமென் மணியினுல் மாளிகையினுய னருட்படி யிருத்தி வைத்தார், அவரங் கிருக்கிற வேளையிலே யாதியிடம் வானை நோக்கிச் சொல்வார். 91

மருக்கொ னிறையோனே யென்னுதலின் மருவு மொளிவை நான் காணவேண்டுந் தெரியப் படுத்தென்று ரப்போ தாதஞ் செங்கைப் பெரு விர லுபயத்திலுங், தரிபட் டிடவுமே பதித்துவைத்தான் சந்தோஷ மதாகக் கண்ணில் வைத்துப், பெருகப் புகழ்ந்தன ராதநபி பின்பு நடந் தவா றெடுத்துச் சொல்வாம். 92

இடதுவிலாவினிற் கழலை யொன்றை யியல்சேர் நபியாதந் தமக் குண்டாக்கி, மடவி ஹவ்வாவை யதிலுண்டாக்கி வாகாய்ப்பிறப்பித்து நபிமுன்னமே, சுடர்செய்மதிபோல நிற்கச்செய்தான் றுணைக்கண்டு தான் கைபிடிக்க, வுடனேநாடினு ரப்பொழுதங்குதறிவிலகியே சொல்லு வாளே. 93

மஹ்ரு கொடுத்துக்கை பிடியுமென்றார் மஹருக்கென் செய்வே னிறைவாவென, ஜெகமேழ்போற்றிடு முஹம்மதுமேற்செப்புந்தறாது நூறேதுமென்றான், முகமே மலர்ந்தோதி னாதந்தா முகத்துக் கல்யாணஞ் சுவர்க்கத்திலே, சுகமாயிருங்கள் கோதும்பைமட்டுந் துய்க்காதிருங்களென் றிறையோதினன். 94

இருந்தா ரைஞ்ஞூறு வருடமட்டு மிறையோன் விலகிய கனியை யம்மை, பொருந்திப்பருகிட விபுலீசெனும் பொல்லாக் கொடியோன் தான்வந்தங்ஙனே, திருந்தக்கலைத்திட நாடிப்பொய்யைச் செப்பினன் பல கினிலிருந்தே கரந்தே சுவர்க்கத்திற் புகுந்தாதமை ஹவ்வாவும் மவைக் கலைத்தனனே. 95

அன்னோன் கலைவினி லிபுலீசென வறியாதகப்பட்டு ஹவ்வா வும்மா, முன்னோன்விலகிய கனியையுண்டே முடிந்து கனியினிற் சில கனிதான், மன்னுதமுமுண்ணக் கொண்டுவந்தே வழங்கினாது கண்டே நபி, மின்னுடனைக்கோபித் திறையேவலை வெறுக்கலாகுமோ வென வுரைத்தார். 96

அரிவை மேலாசை நபிக்கிறைவ னளித்தான் மயல்மிஞ்சிப் பெண் சொற்கேட்டுப், பருகினாரதைத் தின்றபின்னர் பாவை யுடனேதான் கணவரையுஞ், சுரரேவிரட்டி நீர் பிடித்திழுத் துன்பப் படுத்துங்காளென்றானிறை, பெருகவருத்தஞ்செய் தார்களப்போ பேதை மனதாக ஆதஞ்சொல்வார். 97

ஆண்டபெரியோனே யெங்களை நீ யமரோர் தமை விட்டிங் கலக் களிக்க, வேண்டாமிதைவிட மவுத்தாக்கினல் மெத்த நலமென்றாரப் போதிறை, கூண்டமலக்குகள் களரியிலே கோபப் பிரியமாய் நபியைப் பார்த்தே, மாண்டுவிடக்கேட்டீ ரும்முடைய மனதோ வெனதுட மன தோவென்றான். 98

அந்தவுரையினிற் பயந்தாதமு மரிவை ஹவ்வாவு மிருதிசையில் வந்து பூமியில் வீழ்ந்தனர்கள் மங்கை ஹவ்வாவை ஜித்தாவிலும், ஹிந்தியெனுந்தீவி லொருமலையி லிவர்தங்கணவரும் பிரிவாகவே, யந்தி பகல் முந்நூறெனும்வருட மாகுமட்டுமே தபசிருந்தார். 99

சாவிலானேயென் னெற்றியினிற் றரித்த வொளியதின் பொருட்டா லென்றன், பிாவீம் பொறுத்தரு ளென்றிரந்தார் பரிவாய்ப் பிழை பொறுத் தந்நேரத்திற், கூவிச்சிபுரீலை நபியிடத்திற் கோமானனுப்பின

னவரும்வந்தே, நாவைத்திரந்தாத மேயுமது நாட்டப்படிபிழை பொறுத்
தானிறை. 100

என்ற சொற்கேட்டே பிரியமானு ரிருபேருமக்கந் தன்னிலேகி,
நின்று அறபாவில் ஹவ்வாவுட னீங்காதிருத்தியே சேர்த்து வைத்துக்,
குன்றுப் பெரும்வானிற் ஜிபுரீல் போனூர் கோதையுடன் கூடிச் சூலொன்
றிற்கு, வென்றியுறுமாணும் பெண்ணுமாக விருவருஞ் சேய்கள்
பெற்றிருந்தார். 101

இரவிற் பெறும்பிள்ளை பெண்பிள்ளையு மிறங்கும் பகற்பிள்ளை
யாணுமாகப், பெருகப்பலுகிடப் பெற்றிருந்தார் பின்னர் நபியாதஞ்
சீதெனும்பேர், தருஞ்சந்ததியான நபியைப்பெற்று ரவர்தம் நுதலினின்
முஹம்மதெனும், பொருவு மொளியினை யொருமுத்தெனப் பொற்
பாகிட வைத்துப் பதித்தனனே. 102

சிலநபியாதம் நபியப்போதிற் சீதுநபியெனுஞ் சுதனைநோக்கி,
கோலப் படைப்புக ணைவைக்குமுனங் குறித்தே முஹம்மதர் நபி
யொளியை, யாலம் படைத்தவன் குதறத்தினு லமானிதமாக வென்னு
தலிற், சாலவகுத்தம ரோர்கடம்மைச் சாற்றினன்ஸஜ் தாச்
செய்யவே. 103

செய்யுமெனவானே ரெவருஞ் செய்யச் சேதனிபுலீசு செய்ய
ததா, லுய்யும்லகுனத்து மிகவுண்டாகி யூழிநரகபாத்திரனுகினன்,
கொய்யும் வினையாலே யெமைசொர்க்கத்திற் கோதுமைக்கனி யுணா
வருத்தி, நைய்யும் பலத்தினு லிறைமுனிந்து நானிலத்தினி லிறக்
கினனே. 104

அழுதுமுந்நூறு வருடமட்டு மாகங்கலங்கின போதிறையோன்
பழுதாகியபவந் தனைப்பொறுத்துப் பாவையோடுமே யென்றனையுங்
கொழுகலாக்கின னவன் பொருட்டாற் குலவுமொளியான தென்னைநீங்
கித், தழுவவொளிநுத லார்ந்ததினுற் சாற்றலொன்றதைத் தகையிற்
கேண்மின். 105

தரணிதனிலுயர் குலமாதினைச் சாலமணந்துதா ளிணங்குவீரேய்
வருகுமொளியெனுங் கருவோங்கிய வாசகதுடனீன்றசுதன் மரபிற்,
பெருகுமநூறது துய்தாகவே பேணியுறும் நவீ ரமானிதமே, திரு
மெய்க் குலமாதை மணந்திணிங்கிச் செலுத்தாதீரும்பின் சுக்கிலத்
தில். 106

நூருகவுறு முஹம்மதியா நூவலு மொளிவினி னுயர்வுதம்மைப்,
பேருற்பெரிதான விறையவன்றன் பெருமைக்குரியவும் வகுத்ததாலே,
தேறுமதியுள மேன்குலநற் செய்கையாளரின் றன்மரபில், நோய்வருக்
வென் றுறைத்தாராதம் நெறியைப் பொருந்தினர் நபிஸீதுமே. 107

வந்தசிதெனும் நபியீன்றசேய்வள்ளல்யூனுசு நுதலிடையில், அந்த
முறுமுத்தி னொளிவானதை யணிந்துறவிற் றினனிறையோன், கொந்
தாலமவர் புவிதனிலே கொழுகியீன்றிடுஞ் சேயதனில், வந்தஹாயினு
னென் பவர்நுதலில் வளருமதிபோன்ற வொளியாந்ததே. 108

ஆர்ந்துவவ்ர்மா பிறங்கிடவே யருளும் புதல்வரில் மகுலீலெனுங்,
கூர்ந்ததிருநாம முறுமவரின் குறித்தேயுறும்நய னத்திடையிற், சார்ந்த
வொளியான திலங்கிடவுங் சகலமாந்தரும் பணிந்துபோற்றத், தேர்ந்த
வுளத்தாரா யனுதினமுஞ் செழித்தே யிருந்தனர் ஜெகமீதிலே. 109

ஆண்டபுவியினி லவரீன்றசே யானவெறுதெனு மவர்நுதலிற்
பூண்டவொளியான திலங்கிடவும் புதியோ னமைத்தனன் புகழுறவே,
காண்டவுலகிடை வுகுறுகெனுங் கவலும் புதல்வனை யீன்றாவர், கூண்
டநாசியி னுனியருகிற் குலவுங்கிரணம் வந் துதித்ததுவே. 110

திருத்தமாகிய நெறியினுறுஞ் சிறந்தபதியினற் றவர்வாழ்த்திட
வொருத்தனுகிய விறையருளு மோங்கும்புகழார்தஞ் சுதனுகிய
பொருத்தமுறுசலீ மெனவுற்றிடும் போதகரீதுரீசுநபி, குருத்தவவர் திரு
நயனத்திடை குறத்தொளியஃ துதித்ததுவே. 111

உதித்தநூறொளிப் பிரகாசமா யுறும்போதிறையவன் ஜிபுரீயீலும்,
கதித்தசுக பெனுந் திருவுரையைக் கவலவதினுல கவர்கோ துதியே
மதித்தியவருந் தமது தீனில் வருகவிளம்பியே யுறுமங்நாளிற், பதித்த
வடிவம்போ லொருசேயினைப் பயர்ந்தார் மத்துசல் கெனுநாமமே. 112

உற்றமதியென முகமிலங் வுறுநல்லவர்நுத லிடைவொளிவு
பெற்றுப்பிரகாச மாகியுமின் பெரும் நல்லவர்சுதன் லாமக்கெனும்,
வற்றுருச்செல்வ முறுபவரின் வளமார் நுதலிடை யுதித்தநூறு, கற்றன
ருளாலே பிரகாசித்துக் கனத்தவரிசையு மிகவுற்றதே. 113

உகந்தங்கிறையோனை யனுதினமு முறுநாளுளுற்றிய தவப்பேரு
லும், ஜெகத்தின் முறுசலாம் நூஹ்நபி செம்ம லினையீன்றார்
சேய்நுதலின், மிகவுறறிடுமொளி யிலங்கிடவும் விண்ணோ ரனுதினஞ்

சூழ்தரவே, பகருமிறையேவ லொழுக்கந்தனைப் பலனுளோ தினருலக வர்க்கே. 114

உலகிற்சிலரல்லான் மற்றெவரு மொடிங்கினுரிலே யதற்கிறை யோன், சலதியெனநீத்தம் பெருகிடவே தம்மோரினையொரு வங்க மீதில், நிலையினேற்றியங் கார்ந்தவெள்ளம் நிலத்திலீன்றசேயாகிய நேர், தலைமையுறும்ஷாமென் றவர்நெற்றியிற் றகைமையுறுநூறு பிர காசமே. 115

இலங்குமவரிறை யோனருளா லினக்குபிர்களைத் தவமியற்றி, ஜல மதுறும்வாரி யாடைசூட்டுந் தாணிதனிலறு பகுவையீன்றார். நலங் களுறுமவர் நயனத்திடைய நாசிநுனியெனு முச்சந்தியிற், றுலங்குந்தல முறை யுறுநூறது துதிக்கப்பிரகாச மானதுவே. 116

உறவேயவர்பயந் தருள்சுதனு முலகில்ஸலாமென அருளும்பே ரார், ஷறகினெறிபிற மூர்மேனிலே சார்ந்ததபோதனர் குடைக் கரததார், நாரி னிவர்மிகு நல்லாரென நவின்றே திசையுளார் நயந் தேத்திடப், பெரியோனருளுறும் ஐபறெனப் பெயறுஞ்சேயை பெற் றனரே. 117

தந்தைநுதலுறு மவ்வொளிவு சார்ந்தேஐபறி னெற்றியிலே, விந்தையாகவே யிலங்கிடவும் விண்ணோரேத்திட வீற்றிருந்து, சிந்தை யொருமித்துப் புருந்ததவந் திரண்டு பாலகென் றொருசேனைப், புந்தி களிடப் பயந்தருளிப் புவின்மிசையுளார் போற்றிடவே. 118

போற்றி செய்திட வரும்நூறது புகலும்பாலகர் நுதலினுற வேற்றமாகிய விறையோனரு ளென்னுமுதவியை யெந்நாளுந், தோற்ற முறவேதான் றியானித்துள்ஞ் சோர்வி லாமலே வணக்க முற்றுச், சாற்றுற் கனம்போ லொருசேயினைத் தாணி தனிலீன்றார் தகை யுறவே. 119

ஜெகத்தி லுதித்திடு மதலையின்பேர் செப்பும் ருகுவா வெனவோ தினர், உகப்பி னுரெளி யவர்நுதலி னோங்கிப் பிரகாசித்துறு கையிலே, அகத்தி னுவப்புறச் செபதவமே யனேக மியற்றியே யிறை பக்கலிற், பகுத்த வருளினு லொரு சுதனைப் பகருஞ்சாறூகைப் பயந் தனரே. 120

சாறூ கெனுமவர் நெற்றியிலே சார்தே யுவ்வொளி யிலங்கி டவுந், தேறுங் குலமாதை மணம்புரிந்து சேர்ந்து மிகவாழ்ந்து

வருகையிலே, பாரில் மிடியோரின் வறுமைமீளப் பசுபொன்னருள் பல தானமீந்துங் கூருந் தவத்தினு லிறையருளைக் கொழுகி னலீறெ ஹுஞ் சுதனையீன்றார். 121

தவஞ்செய் தீன்றசேய் தன்னுதலிற் சாற்றும் பொலிப்புறும் நூறுனது, சுவனத் தாளமென் விலங்கிடவே துய்யோன் றனைத் தொழு துற்றப்போதில், அவனி தனிலேதா னழகாகிய ஆஸறெ ஹுஞ்சிசு வதனையீன்றார், நவம தாகிய நூறுனது நாடி யவர்நுதலார்ந் ததுவே. 122

சீத மதிமுக வடிவுடையார் தீதொன் றணுகாத வருள் நெறி சேர், போதங் கல்வியும் பொறையுமிகப் பொங்குமுளத்தா யனுதினமும் நீதி யிறையேவல் நீங்கிடாது நிலத்தில் நிகழும் நாளவர் தவத்தின், காதலுடனேதான் தாபித்தெனுங் கருணை யுறுஞ்சேயை யீன்ற னரே. 123

எடுத்த நூறது தகமையுறு மெழிலார் புருவத்தி னிடைதோன் றவே, அடுத்தே யெவருமுற்ற றதிஜுபித்தே ஆனந்த வாரி யிடை மூழ்கவே, தொடுத்தே யொருமாதை மணமுடித்துச் சுகித்துப் பயந் தன ரொருதோன்றலே, விடுத்த வொளியான திவர்நுதலில் விளங்கு மெசுஹறபு விவர்ணுமமே. 124

நாம முறுமிகு நளினராமென்னகரார் போற்றிய நாவலரின் வாம முறுமுள மியைந்தவராய் வழங்குங் கொடைக்கரத் தவர் நேர் மையில், நேம முறுமிகு நிஷ்டையராய் நேர்மை யினில் விசுவாசகராய், க்ஷேமமாகவே பயந்தவள்ளற்செப்பும் அஃறபுவெனுஞ் சேயதே. 125

சேயி னுதலொளி யிலங்கியே தீன் செழித்து ஜெகமீதிற் புக ழோங்கிடத், தோயு மிறையவ னருள் தினமுந் தொடரும் வேதியர் தகையன்புற, நேய வுளத்ததரா புறமந்நாளில் நெடியோனுதவியா லவரின் மேன்மை, காயுங் கதிற்போன்ற தயிறகுவைக் காக்ஷியுடனீன் றார் மோக்ஷமாதே. 126

நெடியோ னருளினு லொளியவரி னெற்றி தனிலுற வெற்றிய தாய்ப், படியினெவருமே யதிஜயித்துப் பாதாம் புயத்திடை பணிந் தேத்தவே, அடுகி யமார்க ளணிபணியா யல்லும் பகற்காவற் புரிந் திடவும், வடிகீர்த் துறுகயில் நாகூறெனு மதலை தனையீன்றார் சித றமலே. 127

மூன்னூறுந் தல மீண்டொளிவு முறையா யிவர்நுத லார்க்தொ ளிரப், பன்னரும் பல ருணர்விற் போற்றிப் பாதந் தழுவின ராதா யமாம், சின்னுட் களித்துறும் வேளையிலே திகழு மொருமின்னு டனை மணந்து, மின்ன லொளியென மிக்குவம்தனை மிகவும் பிரிய முற்றீன் றனரே. 128

பிரிய முடனீன்றோர் நுதலினுறும் பிறங்குமொளிவகன்றிறை யருளா, லுரிய மதலையி னுதலார்ந்திட வுலகோ ருணர்ந்தடி யினை யேத்திடத், தரிய லர்க்கிடி யேறெனவே தனியோ னுதவுந்தீன் பயி ரேற்றியே, நெறியோ ரவர்தரும் உததெனுஞ்சேய் நெற்றி தனி லொளியுற்றதுவே. 129

தக்க வுததெனும் பெயருடையார் சால வுந்தவ மியற்றியருள், ஹக்க னுதவியின் முறுசலிமென் றருளு மிபுருஹீம் நபியை யீன் றோர், மிக்கநெறியுளார் நுதலிடையின்மீண்டு மொளிவுவந் திலங்கிட வும், ஒக்கவமார்க ளனுதினமு முவந்து மிகுகாவற் புரிந்தனரே. 130

மேலாம் ஷரீ அத்தி னெறியதனின் மேவிதீன்பயிர் தழைத்திட வுங், கோலமிசுலாத்தி னெழுங்கதனைக் குவலயத்தினி னியறுங் கோமா, னௌலகமுறா தினிடங் கண்ணியினெருப்பைக்குளிர்ந்திடநவம் புரிந்து, ஞாலங்கோல்புரி பவன்மகவாம் நளினஹாஜரு தமை மணந்தோர். 131

கருபாவியற்றியே மகனார் தமை கர்த்தன்தனக்காகக் குறுபா னீந்து, பருமுற்றிடுஞ்சாறுப் பீவிதமைப்பண்புற மணமியற்றி யீன்ற தருமா முறுசலீன் பயஹாம்பரின் றகையினிசுமாயீல் நபிநுதலின், மிகுதிகாரணமுத்தொளிவு விண்ணினுடுவென நண்ணியதே. 132

உதிக்கும் நூறதின் பிரகாசமா யுலகோர் போற்றியே யுறுந்தீ னினைக், கதிக்கநாடொறு மிகுதியான காரணத்தினுற் பூரணஞ் சேர், மதிக்குந்தீனுள்ளோர் மிகப்போற்றிய மக்காப்ரியாபு சம்சம் நீரைத் துதிக்காயாவரும் பருகிடவே துய்யோன் வருத்தன னிவர்பொருட் டால். 133

வண்ணமாகவே வருநாளிலே வானுள்ளோர்களும் புவியோர் களுந், திண்ணமுறமிக வாழ்த்திடவுந் திக்கிலுறுந்தீனோர் பெருகும்

நரலில், அண்ணலார்நபி யிசுமாயிலு மழகார்மாலிக்கென் றொரு சேயின்றார், குண்ணாதிகமொளி யவர்நுதலிற்கூறும் பிரகாசமாயிற் றதே. 134

விந்தையுறுஞ்சேய்தா னுலகினிடை விண்ணோர் சூழக்கார்த்துறும் போதினிற், பந்தமுறவது னான்றமையே பயந்தாரவரினி னயனத் திடை, சிந்தாமணியெனுந் திருவானது திகழ்ந்தங்குற்றிடு மங்காளி னிற், புந்தியுறும்நசு றெனுஞ் சேயினைப் புவியிலீன்றனர் புகழு டனே. 135

புகழுமவர்நாசி னுனியினொளி பூரணமதி யெனத்தோன்றவே, அகமேகளிப்புற வனுதினமு மாதிநாயகன் றனைப்போற்றியே, ஜெக மேல்முறுசலா னவரினார்ந்த செம்மல் ஹூஜிதெனும் நபியையீன்றார், தகையானவர்திரு நெற்றியிலே சாரும் நூறஃதிலங்கியதே. 136

ஆர்ந்து பிரகாசித் துறுமங்காளி லவனி தனிலுளா ரகமகிழ்ச்சி, சார்ந்து சரணடி தாழ்ந்துபோற்றத் தனியோ னருளினா லனுதினமுந் தேர்ந்த புந்தியிற் றவமியற்றிச்சேயை யருளினரவர்க்குறும் பேர், கூர்ந்த முற்றத்தென் றருளினர்காண் குளித்தநூறது வெளி யாகவே. 137

சித்திரவடி வார்நுதலிற் சிறந்தே யிலங்கியேயுறும்போதினில், முத்தித் தவத்தரு ளெத்தியேதான் முறையி னுறவோகண் சரண முறப், பத்தி யுடையவ ரொருசேயினைப் பயந்தார் ஹினா வென்ற ருளியபின், னித்தில மான திவர்நுதலில் நீடும் பிரகாச நூறார்ந் ததே. 138

ததியார் ஹினாவின் றிருமேனியிற் சாற்ற வரிதான வடி விலங்க, மதியின் முகத்தரை மணம்புரிய மண்ணின் மிகுமாத ருளமி யைந்து, நிதியும் நிலவாழ்வு மருள்வோமென நிகழ்த்தியொருமாதை மணம்புரிந்து, பதியில் மிகவாழ்ந்தே யெழிற்சேயினைப் பயந்தார் ஹூசைமாவென் னயந்தரவே. 139

தக்கவொளிவுமுன் றலத்தைநீங்கிச் சவுபாக்கியர்நுத லிடை யொளிர, மிக்கமாந்தர்க ளவையைநோக்கி வியப்பின்றாட்பணிந்ததபி யற்றி, ஒக்கபின்வியங் குறுமங்நேர° மோதுமுலறெனும் நபியையீன் றார், ஹக்கனருளவா நெற்றியொளி யாகாயவுடு வெனவாரந்ததே. 140

அங்கமிலங்கிய வவரீன்றசே யழகா[illegible]லெறனு மவர்நுதலிற் றிங்களெனநூறு திகழ்தரவே திசையின்வி[illegible]ங்க டிசைபுற[illegible], பொங்குங்கிருபையி னிறையோன்றனைப் போற்[illegible] புற மங்நாளிற்; சங்கைகுலவிய வொருசேயினைத் தரணிதனிலீன்றார் கிரணம்போலே. 141

கவியினுறுஞ்சேயின் புருவத்திடை காய்ந்தசுடரது பாய்ந்திடவும், புவியினுளமாந்தர் போற்றிடவும் போதமுளத்தராய்த் தவமியற்றிக், குவியுமுளமார்தை மணந்து கூடிக்குலவியீன்றனர் புதல்வன்றனை, நவிலுமவர்க்கேதான் பிஃறென்றோது நாமமென்றனர் நேமமுள்ளோர். 142

வையந்தனிலவர் புருவத்திடை மதித்தமுத்தொளி வுதித்திடவு மெய்யின்வடிவார்ந்த மாதர்மிக மேலுமணந்திட வியப்புற்றனர், துய்யோரவைநீத்து மேன்குலத்தின் சுரியுங்குழலாளை விவாகித்துமே, சையோகந்தனிற் சுகித்தளவே தாதுவெனுங்கரு போதுற்றதே. 143

கருவாய்குவளறை தன்னிற்பாய்ந்து கவலுமுந்நூறு நாளாகவு முருவுமுயிருற வுதித்தளவே யுள்ளம்பாலெடுத்தமுர்தமூட்டி, யிரவும் பகலுமே யிமைவிடாது யீன்றதாய் தந்தை யினிதாகவே, அருமையுடன் வளர்த்த தாரவர்பேரருளும் ஹாலிபென்றுற்றமாதோ. 144

முற்றியுறுமவர் நெற்றியிலே முயன்றேயுறுநூறி னொளியானது, வெற்றியுடன்பிர காசமதாய் மேலோனருளினு லிலங்கிடவே, யுத்தமாகிய வானவர்கள் சூழவேகாவற் புறிந்திடவும், நற்றவத்தரா யனுதினமு நாயன்றனையோதிப் போற்றினரே. 145

இணக்கமுறுநாளி னிறையருளா லீன்றார்லுவை யெனுமோர் சிசுவை, பிணக்கமின்றியே யவர்நுதலிற் பிறங்குமொளிவுவந்திலங்கினவால், வணக்கமொழுக்கமு முபசாரமும் வஞ்சமகற்றிய நெஞ்சகமுங், குணக்கடலெழு மதிமுகமுங் குலவியோங்யே நலமானதே. 146

குலவிவாழ்கயி லோர்சிசுவைக் குவலயந்தனி லீன்றெடுத்தார், நிலவினொளிவென வலர்நுதலில் நீண்டநூறது பூண்டொளிரத், தலைமையானவ ரெவருங்கூடிச் சீற்றினர்நாமங் கருபுவென, விலகலகற்றியே நெறியொழுங்கை விளம்பினர்பூவின் களங்கறவே. 147

பூவினுறுமாந்தர் புதுமையுறப் புகலுங்காரண மிகவிளங்கி,
நாவினிறைபுகழ் போதகமு நவின்றுருலகவரும் நயமுறவே, தாவி
னெறியினிற் சதாதினமுந் தவமேபுரிந்தனர் தகுதியூடு, மோவியம்
போன்ற வோர்சுதனை யுலகிலீன்றன ருவப்பாகவே. 148

நீதியாகவே பயந்தசுத னிகழ்த்துமவர்நாம நபியில்யாசு, சோதி
யுறுமவர் நெற்றியிலே தோன்றுநூறது பூண்டிடவே, ஆதிநாயனை
யனுதினமு மயராதுளத்திடை யன்புகூர்ந்து, கோதிலாமலே தவம்
புரிந்து கொழுகியார்ந்தன ரழகாகவே. 149

அழகானநபி யவுலாதிலே யறையுமுற்றத்தென் றுருசேய
தின், றழுவும்நுதலிடை நூறுனது தனியோனருளினு லேயுற்றிடக்
குழுவாங்கிளைஞர்க ளன்புறவுங் கூர்ந்தேயார்ந்தனர் குறியினூடு
பழுதிலாமலே வியற்றுந்தவப் பலனினொருபால கனையீன்றனர். 150

பாலகன்றனை யனுதினமும் பாதுகாத்தனர் தீதறவே, சிலர
வர்க்குறுந் திருவினுமம் சிறந்தகிலாமென வருளினரே ஞாலந்தனில
வர் நுதலிடையில் நயந்தநூறோங்கி ஜெயந்தரவே, கூலரிவரெனக்
குவலயத்தோர் ருலவிவாழ்ந்தனர் நலமுறவே. 151

ஈனமகற்றியே யிறையருளை யின்புற்றவர்தீனி னிணங்கியே
தான், மானமுறுங்குலம் விளங்கிடவே மகனையீன்றன ரவர்க்குறும்
பேர், கானமுறும்நல ஹுசையென்றேதான் கவலுமவர்திரு நெற்
றியிலே, பானுவெனநூறு மதித்தளவே பாருளார்நோக்கிப் பண்
புற்றனர். 152

உற்றுராதியை யுளத்தினூடே யுன்னிஜெபதவ மிகவியற்றி
வற்றுருச்செல்வம் வளர்ந்தோங்கிட வாழும்போதினி லவரீன்ற சேய்,
வெற்றியுறுமப்துல் முனு பெனும்பேர் விளங்கும் நுதலிடை நூறு
னது, சற்றும் விலகிடா துற்றளவே தழைத்துப்பெருகியே சுகித்
தனவே. 153

உலகினிறையருண் மிகப்பெருகி யுற்றுருடன்கூடி யுறும்போதி
னிற், றலைவரவர்க்குறுஞ் சந்ததியிற் சாற்றுஞ் சிறப்புள்ள ஹாஷி
மெனும், வலுவார்ந்துளவவர் திருநுதலில் வந்தேயொளிவுசிந்தா
தொளிரக், குலமூர்ந்திடும் ஹாஷிங் குறைஷியருங் கோத்திரந்தழைத்
தோங்கியதே. 154

ஓங்குமருள் மக்கா புரிதனிலே யுலவுமாந்தர்க ளிறைஞ்சிடவும் பாங்காயுறுகின்ற போதிலவர் பயந்த வப்துல்முத் தலிபெனுஞ்சே, யாங்கிலழகரா மவர்நுதலி லலர்ந்தநூறது நலந்தொளிரத், தாங்கிய மரர்களிடைவிடாது சாலவுங்காவற் புரிந்தனரே. 155

மக்காபுரியினில் வல்லோனருள் வாகுபெறும்வானோர் பரவியுற, மிக்கமரபினர் ஹஜ்ஜியற்றி மீளுமறபாவு மாவுசம்சம், திக்கோரிறைஞ் சிய கருபாவதின் றிரவுகோலிவர் கலமுறையிற், றக்கதலைமையும் நாடாக்ஷியுஞ் சார்ந்தேயார்ந்தனர் தலந்தனிலே. 156

பிரியமாகவே குலத்தெவரும் பேணிபதமரை தனிற்பணிய, நெறியாயவரார்ந்த போதில்மிகு நேசவிசுவாச பாசமுறுங், குறியா மீன்றிடுஞ் சேய்களிலே குலவுமப்துல்லா திருநுதலிற், செறியு நூறொளி யிலங்கிடவே தேசமனுவோர்க ளதிஜயித்தார். 157

அதிககாரண மிதனையிந்த வவனிதனிலுறு மரசர்களுங், கதி யானவேத முணர்ந்தோர்களுங் கணிதர்ஜோதிடர் நுஜூமிகளு, மதி யாலுணர்ந்தனர் முஹம்மதெனும் வரிசைநபியவ தரிப்பரிஃ, ததியா மெனவிண்டா ரவ்வாறது தரணிதனிலெங்கும் விபரித்ததே. 158

எங்குமுளமாத ரப்துல்லாவை யிலங்குமணமுடித் திணங் கிடிலோ, சங்கை முஹம்மதர் நபியுநம தகட்டிலவதரித் திடுவாரயின், றிங்களுலவிய வான்புவியுந் திகழுஞ்சுவனமு டுற்றோரிலுந் துங்க முறு மேன்மை நமக்குண்டெனச் சுரியக்குழலார்க ளுளமூடுற்றே. 159

மின்னலொளிவுறு மப்துல்லாவு மீளமணந்திட வியைந்திடுகின் பொன்னும் நிலமாக்ஷ புரிவோமெனப் போதலைத்தூதுந் தூசும்விட் டார், கன்னலிணையுள மிலையுண்டெனக் கவலாதிருந்தன ரவ்வேளை யில், வன்னத்திருமேனி ஷாமரசி மவுலும் நுஜூமர்பா லுணர்ந் தளவே. 160

சேனைத் தலைவர்க ளுடனெழுந்து செறியுங் கானகத் தடமு நீந்தி, மான மறுமவ ருறுமக்காவில் வந்தேவிடுதி விட்டனளவ்வூரார், கான முடனேதான் காணிக்கையைக் கரத்தி லேந்தினர் பொருத்த முற, வான பிரஜையர் தம்மைநோக்கி வழுத்தலாயினள் தழைத்த மாதே. 161

மக்காபுரியெனும் பொதுத்தலத்தில் வாழும்ஹாஷிமி குறை ஷிகளே, ஹக்கனருளால யுமதூரினி னப்துல்லாவெனும் பெயரார் தமை, பொக்க வழைத்துறு நவிரென வுரைத்தே யழைத்திடவவர் கடன் மின், துக்கமுத்தலி புத்திரரின் விளங்கு மப்துல்லாதமை னேக்கியே. 162

ஆகமிலங்கிய வடிவினையுமமிர்தமுறு மொழியவயங்களுங், கோகி லச்சுரக் குரலோசையுங் குலவும் நுதலொளிக் குறியுமிகு, வோகை யுறநோக்கிருகிபருளுரையு மொருங்குற வோர்ந்துமுள மோக மாகியே மணந்திடவுமொய்ப் புற்றுறுமூரார்க் கிஃதோதினள். 163

மன்றல் கமழ்மாலைப் புயமிலங்கு மன்னர்முத்தலி மீன்றெடுத்த, கன்று மப்துல்லா தமைமணக்கக் கருதியான்வந்த காரணமே, யின்று போய்நாளை வாருநீவிரினிய மணவார்த்தை யிசைத்திடுவோம், நன்றே யெனவந்த சமூகநீங்கி நகரா ரவரவர் மனை நண்ணினர். 164

தாவு மனையினின் முத்தலிபு தம்மோ ரினையழைத் திருத்தி னேக்கி, ஆவ லுறும்ஷாமி னரசியுளத் தன்புகூர்ந்தப் துல்லாவினை, யேவலுடன் மணந் தழைத்துநகர்க் கேகிடிலெங்கோ காண்பதெனச், சாவினரது தவிர்ந்திடவே தகுதி யிற்சூக்ஷி சாற்றுகென்றார். 165

அருளுங் கிளையான வவரப்போதி லப்துல் முத்தலி பினைனேக் கியே, திரங்க ளுறுநம்மோர் குலத்தில் வாய்ந்த திருவி னுமினு தமை நமது, வரங்க ளுறுமப் துல்லாவுக்கு வாகு மணமுடித் திடிலோவுற்ற, தரங்க ளுறும் ஷாமி னரசி நீங்கித்தன்னூர் சார்வளென்றே சாற் றினர். 166

ஈது முத்திரைச் சூக்ஷியென வியம்பி யாமினுவெனும் பீவியைக், காதலுடன் மணமுடித்து மிகக் களிப்பு மீறியே யிணக்கமுற, நீதரப் துல்லா நெற்றியிலே நிறைந்து பிரகாசித் துறுமொளிவு தாதுவுறுங் கர்ப்பக் குவளறைபிற றரித்த வெள்ளி யிராவையிலே. 167

விடிந்த மறுநாள்ளி னுதயாதியில் விரைவில் ஷாமர சுறுநாயகி, படிந்த வப்துல்லா தமையழைத்துப் பகுத்து நோக்கிட நுதலொளிவு, அடர்ந்தி லாதவிக் காரணத்தை யருளு மெனவோத வாமினுவைக், கடிந்து மணந்தூயா னின்றிரவிற் கலந்ததாலெனக் கவற் றினரே. 168

கூறுங் காரணக் கேட்டரசி கூம்பி முகம்வாடித் தியக்கமுற்று மாறு வியற்றின ரென்றுன்னியே மக்க நகருற்ற மாந்தர்தமைச், சார வவரில்லிற் கேகாமலே ஜாதிக்கட்டுற வோதியபின், வீறினெழுந்து தம் மூரடைந்து விகற்ப முறவங்கு வீற்றிருந்தாள். 169

காண்டப் புவியினி லரசீண்டக் கற்பி னுறுமாத ரினிலே மிக்கோர், தீண்டி யப்துல்லா தமைச் சுகிக்கத் திருவின் மணந்திடவுற் றோரினில் மாண்டார் நானூறு பெண்ணனேகர் மவுனப் பயித்திய கியானமுற்றோர், தூண்டா மணிவிளக் கெனவாமினு துய்ய வயிற் றிலா னுருவானதே. 170

சேயுண் டானதை யறியாமலே தெரிவை யாமினு ரிருந்தாரப் போ, நாய னேவினுன் முறுசலான நபிமார்க டம்மை மாதந்தோறும், போயோ திடுங்கன வினிவிலுமக்கோர் புதல்வர் முஹம்மதுண் டானுரென்னத், தாயாருடனந்தப்படி யோதினுர் தரித்த கர்ப்பமு முதிர்ந்ததுவே. 171

கருமா ரிகாணும் வேளையிலே கழறுங் குடும்பத்தின் பெண் ணோர்க்கெலாந், திருவினுமினு சொல்லியனுப்பச் சேர வெறுத்து வந்தாரிலேயே, குரிசி லப்துல்முத் தலிபெழுந்தே கோதி லாக்கரு பாவிலேகித், தரிபட்டிருந்தான் சாளயமாய்த் தக்கோனைப் போற்றிச் சொல்வாரே. 172

எங்கட் குரித்தான தம்பிரானே யெண்ணி யான்வந்த காரியத்தை, யெங்கள் மனமெய்க்க முடித்திடுகவென்ன வுரைத்தங்கே நிற்குநேர, மங்கையாசியா மறியமானோ ரவர்களரம்பையர் பறவைகளைப், பொங் குங்கடற்போலங் கிறையேவினுன் பொலிவதாய்வந்தே மனைபுகுந்தார்.

புகுந்தங் காமினுர்க் கேவல் செய்தார் பூமி வான்மட்டு மண மொளிவு, மிகுந்து பிறந்திடக் கஸ்தூரியும் வீசச் சிரசினினெய்யுந் தேய்த்தே, முகந்தான் மதியினுந் துலங்கிடவே மூன்று கலிமாவு மெடுத்துரைத்தே, வகிர்ந்த சுன்னத்துஞ் செய்திருக்க மலர்க்கண் சுறுமாவும் வரைந்திருக்க. 174

இடக்கை யாலேதம் மபமும் பொத்தி யேகன் றனைத்தொழு திறைஞ்சி யேத்தித், தொடக்கொண் றணுகாம லாதிதூதர் தூய்தாய்ப்

பிறந்தனர் பிறந்தவுடனெடுத்துச் சுவர்க்கத்தில் வானவர் கொண்டேகி நீராட்டிப் பட்டாடையு, முடுத்தி மட்டிடாச் சிறப்பினுடு முவணை வானங்க ளெங்குஞ்சுற்றி. 175

நொடிக்கு நொடிப்போதிற் கொண்டுவந்தே நூறு முஹம்மதைத் தாய்மனையில், வடிவுவிளங்கிட வைத்துப்போனார் வயதுநாற்பது வருமளவு, நெடியோன் மலக்குகள் நபிமனையை நித்தமுங் காத்தங் கிருந்தா ரிப்பார், படியினபிப்பட்டம் பெற்றிசுலாம் பாயிதாக் காத்தார் பலநாளும். 176

ஏணிமிகுரூஜூக் கதின்பின்னேகி யிறங்கிக் காபிர்கள் வழிய கற்றிப், பேணித் தீன்வளர்த் தறுபதுடன் பேசும் வயதொரு மூன்று மட்டுங், காணும் புதுமைகள் மிகவுங்காட்டிக் கர்த்தா வருளினாற் சுவர்க்க வாழ்வைப், பூணமனநாடிப் பயணம்போனார் புகலமுடியாது சிறப்பினையே. 177

ஆற நபிதிருக் காரணமு மவர்தம் நடத்தையுநடைபடியு, மேலான நூறு நாமமதின் மேவும் வரிசையை யெழுதவேண்டிற், சாலவா னேழுங் கடிதாசியாய்ச் சததசாகர மாறுகுளம், போலு முளபுனற் சாயமாகப் புவியி லுளமரம் கலமதாக, 178

மனுடர் ஜின்கள்வான் மலக்கவரும் வகையுந் தொகையுமாய்க் கியாமமட்டும், நினைவி னுடனேதா னெழுதினுலு நிரப்பமாகவே யெழுதொணாது, தனிய னறிகுவா னூறுநாமந்தன்னைச் சங்கையாய் வைத்தோர்களும், அனுதின நன்றாயெழுதினேரு மாசையுடன் கேட்டோர் படித்தோர்களும். 179

முத்தித் தலைமீதிற் கொண்டோர்க்கு மோகமுடன் பேணி வைத்தோர்களும், நத்தி மனதுவைத் தோதினேரு நாட்டார்க்கெழு திடக் கொடுத்தோர்களும், புத்தியுடன் கண்ணுற் பார்த்தோர்களும் புவியின் மீதிலுமாகிறத்தும், கத்தனருட்படி பெறும் பேறுகள் கணக்கி லிவளவென்றடங்கிடாதே. 180

முப்பாற் படைத்தநாண் முதலாகவே முடியு மளவுமே யுண்டாகிய, மைப்பாய் மழைத்துளி யெண்ணத்தினு மண்ணி னெண்ணத்து மாத்தினுள்ள, கொப்பா ரிலைகளி னெண்ணத்திலுங் கோல வுருக்களி னெண்ணத்திலும், தப்பாகிய பாவஞ் செய்தாலுந்தான் தனியோனப் பிழை தனைப்பொறுப்பான். 181

வறுமை தங்கடம் புலைகளவு மாற்றார் பகைகொலை சடிதிச் சாவு
பிறபாவஞ் சோம்ப லலம்பல்மிடை பின்னை யெவை யுண்டு
மவைகளெல்லாங், தறைமீ தவர்கட்குக் கனவிலுமே சற்றுஞ் சாரா
தங் கெங்கோமு, மிறைவனுகிய வல்லநாய னியல்பாகக் காத்துக்
கொள்ளுவானே. 182

துஞ்சம் பொழுதினு லவர்களுக்குத் தொண்டைக் கசப்புமே
சற்றுங்காணு தின்சொன் மறையவன் கிருபைனுலிரண்டு சுரர்களை
யவர்பால்விட்டு, மிஞ்சும் றஹ்மத்துச் செய்யச்சொல்லி விப்பான் றலை
மாட்டி லவர்கள் வந்தே, யஞ்ச லெனச்சொல்லி நன்மை னென்னு
மரிய பட்டோலை கொடுப்பார்களே. 183

உங்கள் பாவந்தான் பொறுக்கப்பட்ட தெனவே யுறைத்து
நல்மாராயமுங், திங்கணிகரான முகமிலங்கச் செப்புவார்கள் கண்
வெளிச்சமாகுத், தங்குங் குமியினி லிருட்காணுது தசையு மெலும்
பைவிட்ட கன்றிடாது, மங்கிவிடாதுடற் புழுப்பிடிக்க மாட்டாதிபு
லீஸின் தீங்கிலையே. 184

வேதனுற்குரித தாஞேர்பெற்ற மிக்க சுவர்க்கமு நான்குவேதத்,
தூதரும்மததோர் பெற்றபேறுந் தொடர்ந்து தலைமுறையேழுமட்டும்
போதப்பெறுவார் களவர்கள் முகம் பொழுது நிலவுடு மின்போல
வுஞ், சோதி மிகவாக வெங்காளுந் துலங்கி யிலங்கிடும் பெரிதாகவே.

அச்சம் பயமில்லை மவுத்தாமட்டு மழகு மொழுக்கமும் பெற்
றிருப்பா, ரிச்சைப் புவியினி லிவர்களுக்கு மிறைக்கு நடுவிலோர்
மறைவுமில்லை, வச்சவவதியைத் தட்டி யப்பால் மலிவாய் ஹயாத்து
நீளித்திருக்குஞ், செச்சை கமழ்மறை தனிலேவல்லோன் செப்பி
னென்றே ஜிபுரீல் சொன்னர். 186

இந்த வறிவினைச் சங்கைசெய்தோர்க் கிறைவன் மறைநான்கு
மோதுபேறு, மந்தமுடன் ஷஹீ தவர்கள்பேறு மவர்க்கு மிகவாகக்
கிடைக்குமென, விந்தை யறுஷினிற் புலியாகவே வெற்றி பெறுமலி
தாமுறைத்தார், எந்த மூமினுனவர்களுக்கு மிவ்வே யாசென்று சொல்
லப்படுமே. 187

ஈயும் ஸக்காத்துக் காரியங்களெல்லா நிறைவேறவேண்டு மென்
ழுற, றாய வுலுச்செய்து கொண்டோதினுற் சோர்வொன் றணுகா
மல்கபுலாகிடுங், தேயம்பெறுவெள்ளி யிரவிலுலுச் செய்து மகிழ்ந்

தோதத் தலைமாட்டிலே, யெயமலக்கிரு பேரிறங்கி யிவர்க்கு றஹ்மத்துச் செய்வார்களே. 188

காடுமரங்களு மினதையறிந்தே கத்தாவிடத்தினி லிந்தப்பேறு' தேடிக்கொளப்பெற்றோ மில்லையென்றே சிந்தைமிகநொந்து சலித் திருக்கு; நாடும்புகழிமாம் கஸ்ஸாலியார் நவின்றாரவருக்கு நம்மிறை யோன், வீடும் றஹ்மத்து நாள்கடோறு மேவச்செய்குவானாகவுமே. 189

பரிவாயெழுதிய நன்மூந்நூற்றுப் பத்துக்கித்தாபினில் நூறு நாமா, தெரியவெடுத்துத்தான் கோவைசெய்தார்சிறக்கும் பொருளதி லொருகித்தாபு, மறைந்துகாணாமற் போனதுதான் வல்லோனுதவியாற் கண்டெடுத்த, தொருவன ருளினா லதையும் வைத்தே யுவப்பாயிருந் தன ரொருதலத்தே. 190

இருந்த கஸ்ஸாலி யாறைக்கண்டோ ரிளவலோடிப்போ யெங்கும் புகழ், பரந்தமுஹம்மது காசிமெனப் பகரும்பேர்பெற்ற சுலுத்தா னுடன், றிருந்தவிமாமிந்த வூருக்கிவர் சிறப்பாயிருக்கின்றா ரென்று சொன்னார், பொருந்தச் செவியினிற் கேட்டவுடன் பொருளின் மகவுட னெழுந்தனரே. 191

படைகளுடனேகியொருநாளையின் பயணம்போயெதிர் சந்திப்பாகி யுடனே கூடார மடிந்திருந்தங்குள்ள பலதேயத் தரசரையு, மடல்சேர றமிக ளசுஹாபிக ளடங்கலுகூட்டி வரஆள்விட்டுக், கடற்போலமைப் பித்தா ரவர்கள் வந்து கஸ்ஸாலியாரைப் பணிந்திருந்தார். 192

சிறியோர் பெரியோருங் கூடியபின் சிறப்பான நூறு நாமா வென்னு, மறிவுந்துஆவையு- மூந்நூறுடனாறு மொருநான்கு கித்தாபில்வந்த, முறையையவர்களுக் கொப்பிவித்தார் முழுதுபிரியமாய்ச் சுலுத்தா னுடன், அறிவினறிவாளா ரானபேரு மனைவோரு நன்றாயன்புற்றாரே.

ஆனந்தவாரி மூழ்கியந்த வரியகஸ்ஸாலி யார்க்குச்சங்கை, தான புரியவே ஆடாயிரஞ் சாற்றுமூந்நூறு மாடுடனே, கூனமுது கொட்டை யைஞ்ஞூறுடன் கொண்டுவந்தறுத் தனைவோருக்கும், வானுபுவியுமே போற்றிடவே மகிழ்ந்துகந்தூரி வழங்கினரே. 194

உடமை பணங்கலை களுங்கொடுத்தா ருவந்து கஸ்ஸாலி யார்க் குரிய, கொடைசூழ்மிகவீந்தா ரவர்மனது கொண்டுகையேற்றா ரல்லை யதைப், புடையிலிருந்தோர்க் டம்மிற்சிலர் போற்றி செய்திந்தநூறு

நாமா, நெடியோனருளினு லெழுதித்தாரு நெறிசேரிமாமே யென்றிறைஞ்
சிக் கேட்டார். 195

நன்றென்றிமாம் கையா லெழுதியிந்தார் நல்லோர் பெரியோர் மற்
றுள்ளோரெல்லாஞ், சென்றூரவரவர் மனைகளுக்கே செங்கோல் மிகுசுல்
தான் தம்மனையின், மன்றல் மலரணை மேற்றுயின்றூர் மனுமில் முஹம்
மது நபியுல்லாவும், வென்றியுடனவர் தோழன்மாரும் வேலை போன்
மற்ற நபிமாருமே. 196

ஒருசேகரமாக நிற்கவதி லுயர்ந்தபுகழ்சேரும் சுல்தானுமே, தரி
பட்டிருக்கவு மந்நேரத்திற் சத்தமொருமூன்றங் கறிஷின் கீழாய், விரை
விற் பிறக்கவு முஹம்மதெனும் விளங்கும்பேர்பெற்ற சுல்தான் பிழை,
பரிவாய்பொறுத்தேனுன் சுவர்க்கமுமே பாங்காய் திறந்தீந்தே னென்ன
வுமே. 197

தொனிதான் முழங்கவுங் கேட்டெழுந்தே சொல்லிப்பலருடன்
மகிழ்ந்திருந்தார், மனிதாறிவிதைச் சங்கைசெய்தால் வல்லோனவர்களைச்
சங்கைசெய்வான், வினயமறவிதை முன்னேவைத்து விரும்பித் தொழு
தோர்கள் நபிமாரொடுங், கனதிமிகவானோ ரோடுங் கூடிக் களித்துத்
தொழுதபே றெய்திடுமே. 198

இதனையோதிய நாண்முதலா யியல்சேர் சுவர்க்கத்திற் சிலமா
ளிகை, புதிதாய் வகுக்கவும் படும்புவியிற் புகுதுங்கபுறினி லிருவர்
வந்தே, விதமாய் நீ செய்த பிழைகளெல்லாமேலோன் பொறுத்தன
னெனவுரைப்பா, ரிதமாயெழுப்பியே சொர்க்கத்திலே யேகனருளினுர்
சொல்வார்களே. 199

ஜின்கள் ஷைத்தான்கள் புலிகடுவாய் சிங்கங்கரடிவல் விலங்கினங்
கள், மன்னுங்கொடுமையார் பக்கியின மண்ணிலுளபாம்பு தேள்
நட்டுவை யென்னுமிம்மட்டுந் தீண்டிடாது இவர்சாவளவுமே யின்ன
லான, தொன்றுமிலையிதை யுலுவுடனே யோதினோர்க் கின்னம் பேறு
சொல்வாம். 200

முன்பின் சலவாத்துஞ் சொல்லிக்கொண்டு முழுதுமிதைத்தானே
யோதிக்கொண்டே, யன்னுடனேதான் றுயின்றூராகி லால நபியிற
ஸூலுல்லாவைப், பின்புகனவினிற் றெரிசிப்பார்கள் பெருத்தபுகழ்
சேரும் கஸ்ஸாலியார், இன்பமுறுமிந்த துஆவின் பேரை யெழுதப்
படாதென்று சுருக்கிச் சொன்னூர். 201

மலக்கினெழுபதி னுயிரரை வல்லோன் படைத்தவ ரெல்லாத் தையு, மிலக்கப்படுத்தவும் படும்வெள்ளி நாளிதனை யோதினுற் கருபா வெனுக், துலக்கமாகிய பள்ளிதனிற் றுணைக்கொண் டெனத் தெரி சித்தோராவார், குலக்காவலரான நபிமாருண்மை கொள்ளப் பெறு வார்கள் குணமாகவே. 202

வாக்குமனமுமாய் ஷக்கெண்ணமல் மகிழ்வாயிதையோதி யாதத் தாக, மூர்க்கம் புகுந்தோர் களுலகில் சொர்க்க மோகமுடனே தான் பெற்றொளியப், பூக்கண்மவுத்தாகப் போறதில்லைப் பொய் யென்றி தையாருஞ் சந்தாபித்தால், நாக்குத்தடுமாறிக் கலிமாவன்றி நரகவாதி யாய்ப் போவார்களே. 203

ஷக்காயிதை நினைந்தீமான்மாறிச் சாவாமலாதி நம்மைக்காத்துச், சொர்க்கபதவியு நமக்குத்தந்தே துன்பமகற்றுவானுகவுமே, மிக்க விறையவனே யாமீனுமீன்மேலும் பரிமானின் வாழ்வுகளுந், திக்கி லடங்காத கீர்த்திகளுஞ் சிறப்பாய்த்தருகவும் ஆமீனுமீன். 204

நூறு நாமாவின் சின்ன துஆ.

வசனம்.

யாலத்தீபு, யாலத்தீபு, பில்லதுபிக்க யாலத்தீபு, பில்லுதுபினி பில்லுதுபிக்க யாலத்தீபு, இருதினி, இருதினி, யாஅல்லாஹு யா அல்லாஹு, யாஅலிய்யு, யாஅலிய்யு, யாவாஹிது யாவாஹிது, யா சுபுஹானக்க வலாஇல்லா அன்தவஹு தஹுலாஷரீக்கலா அஷ் ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வறசூலுஹு (லாஇலாஹ இல் லல்லாஹு முஹம்மதர் றஸூலுல்லாஹி) அல்லாஹும்ம ஸல்லி அலா செய்தினு முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மது, யாஜிபுரீல், யாமிக் காயீல், யாஇசுறுயீல், யாஇசுறுபீல், யாஹையூம், யாகையூம், யாச மீஹு. யாபசிறு, யாஹாதிறு, யாஜப்பாறு, யாபதுறு, யாபிதுறு, யாசமது, யாநூறு, யால்த்தீபு, யாஹபீபு, யாறஸ்ஸாக்கு, யாஅஹது, யாமுத்தஹீன், யாஸத்தாறு, யாதல்ஜலாலி வல்இக்றும், ஸல்லல் லாஹு வஸல்லம் அலாகைரி கல்கிஹி செய்யிதினு முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மது.

நூறுநாமா முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

காகிரி நாட்டு வளம்.

கொச்சகக்கலிப்பா.

ஆதியாயஹ தாகியனைத்து மமைத்து நல்லா சாளுமிறைதிருச்
சோதிதண்ணிற் பிரித்தே யமைத்தி றஸூலென்றெங்கும்பர சங்கம
தாகிய, நீதிவேத மறையின் பொருளதை நித்தமோதி நிசமறிவித்திட,
வாதியான ஜமாலு முஹம்மதாம் ஆலிம் வாழும் வகுதை நன்ஞடே
ஆலிம் வாழும் வகுதை நன்ஞடே. 1

சுற்றுவாருதி சூழபுவிதன்னிற் றுலக்கமாசவே நல்லறிவானதைக்
கற்றுணர்ந்திட வேண்டு மென்றுள்ளக் களிப்புடன் வந்த பேர்களுக்
கெல்லாஞ், சற்றுமே குறையின்றிப் படித்துத் தங்களுருக்கு வந்தவர்
போகவு, முத்தியான ஜமாலு முஹம்மது மூமின்வாழும் வகுதை
நன்ஞடே. 2

பிறந்துகிழக் கரையினில் வாழ்ந்து பேரின்பான்பதிஞலு இல்மை
யுந், துறந்தறிந்த வறிவுகள் யாவர்க்குஞ் சொல்லித்தீனைத் தினம்
வளரச் செய்தோர், மறந்தும் பொய்மை கனவினிலேனுநல் வாக்கிலே
யணுகாதநல் வள்ளலாஞ், சிறந்தபேர்கொள் ஜமாலுமுஹம்மதெம்
செம்மல்வாழும் வகுதை நன்ஞடே. 3

அறபுமக்க மதீனம்பகுதா தானஷாமுடன் றூமிசுறூரும், நற
வுலாம் பொழி லச்சபைகோவை நல்லசின முடன்தில்லி மற்றுமே,
பிரபல்ய வொலியென்று மாலிமென்றும் பேர்விளங்கப்ரசங்கமதாகிய,
அறிவுசேர்ந்த ஜமாலுமுஹம்மது ஆலிம்வாழும் வகுதை நன்ஞடே. 4

வானளாவிய மாமரச் சோலையின் மந்திதாவி வருக்கையிற்
பாய்ந்திடத், தேன் கனியுதிர்ந் தோடுநருவதிற் றினையுஞ்சாலி வளர்ந்
திடுநாடு, கான் புகுந்து நதிபாந்தோடிக் கரையெலாநவ ரத்தங்
கொழிக்கும், வானுலாமதி யான்ஜமாலு முஹம்மதினும் வகுதை
நன்ஞடே. 5

பள்ளிதோறினு நம்மிறையோனைப் பணிந்துமாந்தர் படித்த நல் வேதத்தைக் கிள்ளை கேட்டுப் படித்திடுஞ் சொல்லைக் கேட்டு நங்கணமே கிளர்ந்தோடிடுந் தள்ளொணுச் சொல்லி தென்று முசிபத்துத் தங்கிடா தகன் றேவிரைத் தோடிடும், வள்ளலான ஜமாலு முஹம்மது வாழுங் காயல் வகுதை நன்னடே. 6

அன்னமாடை யரிசிகறியுட ஞணிமுத்தொடதிக நல்ரத்தின, நன்னயந்தருந் தங்கம் பொன் வெள்ளியு நாளிடை விடாதே கொடு வந்து தான், இன்னல் சேர்ந்திடு மாதுலர் தேடி யெடுத்துமே கொடுத்தே கலிபோக்கிடுஞ், சொன்னமான ஜமாலு முஹம்மது துய்யோர் வாழும் வகுதை நன்னடே. 7

தங்குவானின் முகில் விரைந்தோடிச் சமுத்திரத்தறல் தன்னை யெடுத்துக் கொண், டெங்குமேகனி தேக்கவருந்தி யெழுந்துவான்முக டெங்கும் பரந்துநற்றிங்க, டோறு மும்மாரிகள் பெய்து செழும் பயிர் வளர்ந்தோங்கிய நாடு, சங்கையான ஜமாலு முஹம்மது தங்குங்கா யல் நன்னு டெங்கள்நாடே. 8

வாசங் கஸ்தூரி வீசும் புயத்து முஹம்மதுதால நபிமருகாலி, சிஷ ரான அசன் பஸரீ யென்னும் சிஸ்தியாகிய நன்முரிதின் வழி, நேசமுற்ற திலே வாசிலாகிடு நிட்சயக்குரு வாகிய நாதராந், தேசமெய்க்கும் ஜமாலு முஹம்மதெம் செம்மல் வாழ்காய லூரெங்களூரே. 9

அண்ணலெங்கள் நபிகிசுறத்த தாயிரத்திருநூடன் முப்பதா, மெண்ணநாலின் முஹற்றமோர் மூன்றி னிலங்குந் திங்களிசாவொருத் தானதில், நண்ணியவெகு தானியாவற்பிசி நாளும் பத்துடனென்பது தன்னிலே, விண்ணிலான ஜமாலு முஹம்மது வீற்றிருக்கும் வகுதை நன்னடே. 10

வள்ளலாதி ஹலறத்திலாகவு மக்கள் சீடரு மற்றுளபேர்களு, மெள்ளவேகுளுப் பாட்டிக்கபன் செய்து வேதமோதித் தொழுவித்து நற்புதுப், பள்ளித்திண்ணைக் குறட்டிலடக்கவும் பாக்கியப்பலனும் பெருத்தோங்கவுந், தெள்ளிதான ஜமாலு முஹம்மதாஞ் செல்வர் வாழ்காயலூ ரெங்களூரே. 11

கத்தன்றன்புறுக் கான்பாட மிட்டிடும் ஹாபிலாம் அப்துல் காதிர் லப்பையலீம், புத்ரரான முஹம்மதி லெப்பைநற் பூபன்காதிறு சாமகு மூதொடும், பத்திசேர் செய்னுல் லாபிதீனென்னுநற் பார்த்திபர்

துணை மேல் வெகுநேசமே, நித்தமுற்ற ஜமாலு முஹம்மது நீ தர்வாழ் காயலூ ரெங்களூரே. 12

மஞ்சுவண்கை மருதுமீருன்லெப்பை யாலிமுங்கள் மகவு மருமகன், செஞ்சொலிப்பனு வல்செய்தகுமதுஞ் சியமன்ன முஹம்மதி லெப்பையும், கொஞ்சுமென்மொழி மாதருமக்கள்தான் கூண்டசிடர்க ளாண்பெண்ணனைவர்க்குந், தஞ்சமான ஜமாலு முஹம்மது சாகிபாள் காயலூ ரெங்களூரே. 13

ஆதிநல்லிறஸூல்கிளைவாழ்கவே யண்ணல்தீன் சுலுத்தான்களும் வாழ்கவே, சோதிதீனமுசு லிம்களும்வாழ்கவே துய்யா நல்லுலமாக்களும் வாழ்கவே நீதிப் பொருளுஞ் சிடாரும் வாழ்கவே நிச்சயக்கவி செய்தோனுக்குந்துஆ, வோதுமெங்கள் ஜமாலு முஹம்மதெம்மொலி விளங்கும் வகுதை நன்னடே. 14

காகிரி நாட்டுவளம்-முற்றிற்று.

இன்னிசை.

ஆதிபிஸ் மில்ஹம்து மருசனுச லாத்துசலா
மோதிஜமா லுத்தீ னுலூமிமும்உரு ரூபூவின்
மீதிருந்தே யேகன் கலிக்கா மேவியது கூறவருள்
ஹாதி றஹுமானே காலிக்குல்றஸ் ஸாக்குல்கரீம். 1

வித்தான தாத்தில் விளைவாம் சிபாத்தசுமா
வுத்த அபுஆலுமிம்பர்க் கோதியநாட் போது மென்றே
பத்தியொளி வீசப் பரிமளவா சங்கமழ
முத்தியடைந் தீர்ஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 2

அஞ்சஞ்சு பூத புலன்பொறிகளைந்தடைக்கி
நெஞ்சஞ்சி லொன்றை நினைவா யரமானர்
தஞ்சஞ்சு மந்தபிரு தவுசடைந்தீர் தவ்வியஇல்
முஞ்சமச முண்டஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 3

முன்னான்கு மூன்றாய் முடிவிலொன்ற தாகியதின்
பின்னான்கி லொன்றைப் பிறித்தறிவு செய்தவர்நீர்
என்னான் குருவா யெழில்சே ரிருநான்கு
முன்னான்கு மானஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 4

மாட்டு வந்தோர் சிந்தை மயக்கமறுத் துட்கமலப்
பூட்டுத் திறக்கவருட் பூட்டியநாட் போதுமென்றே
மீட்டு மகலளவில் மீண்டீர்மெய்ஞ் ஞானந்த
மூட்டுஞ் சுடரே ஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 5

ஏவல் விலகலிசு லாமீமான் தௌஹீது
மேவு மஃரிபத்தும் விண்டதுவுங் கண்டறியக்
காபகபு சையினிற் காட்டிஹால றத்தடைந்தீர்
மூவுலகு போற்றுஞ் ஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 6

தீர்க்க முறுமறிவுன் செய்யமறை யோதுநல
வாக்க தெவர்க்குமினி வையகத்தி லுண்டாமோ
மார்க்கமிஸ் லாம்வழுவா வகுதை நக ராதிபயில்
மூர்க்கமுமே பெற்றஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 7

கஸ்து முதலாங் கருவிகா னாந்தமுமோர்
வஸ்தின் வழி யாயெவையு மதனில்வந் தேயழகாம்
சிஸ்திகா னாவிற் செய்யதவஞ் செய்துவைக்கும்
உஸ்தாதுமான ஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 8

வேலியென வுந்தீன் விளக்குமப்துல் காதிர்லெப்பை
ஆலிம் சுதனா யரியகீ ழக்கரையிற்
பாலின் ரசமான பதினான்கில் முக்குமணி
மோலியாய் வந்த ஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 9

காதல் முஹம்மதப்துல் காதிர்மக மூவருக்கும்
பூதலத்தின் முன்னாய்ப் பிறக்கவதின் பின்புத்தீர்
ஆதரவ தாகஸைனுல் லாபிதீ னுக்குமுன்னே
மூதறிவு சேரும் ஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 10

மாலிருக்குஞ் செங்கை மருதுமீ றானிலெப்பை
ஆலிமுக்குத் தந்தையுமா யன்பார் முறுஷிதுமாய்

நூலிருக்கு நட்ப நுவலிருக்கும் வாக்கின்மரு
மூலிருக்குஞ் சிந்தை ஜமால் முஹம்மதொலியுல்லாவே. 11

ஆதுலர் சகாயன்செய்யி தஹ்மதுவாம் சாஹிபுக்கு
மோதுங்குங்கு மப்புயத்தான் முஹம்மதிலப் பைக்குமின்ப
மாதுலரு மாய்க்கை வழங்கும்பீ ராகுமஹு
மூதுதிருல் பேரர்ஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 12

ஆறுறு மோராறு மையாறை நான்கிசுமிற்
கூறுறு மைந்துமனங் கொண்டு வந்து கண்டோரே
நூறுறிற் பாதி நுவலுமிசும் பைத்துல்மகு
மூறுக நின்றஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 13

தேவாதிதேவர் சிறந்தமனு ஜின்முதலாஞ்
சீவாதிஜீவச் செழுஞ்சுடரில் வந்துதித்தீர்
பூவாதியந்தம் பொருந்தாப் பொருத்தமகு
பூபாம் சிர்ருன ஜமால் முஹம்மதொலியுல்லாவே. 14

ஆலநபி கிசுறத் தாறிரண்டு நூறுறும்
நாலே ழதின்முஹர்ற நாள்மூன்று திங்களிராச்
சில இஷாவதின்பின் ஜென்னத்தடைந்தீர் சுருதி
மூலமாய் நின்ற ஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 15

இப்பதியி லோரா யிரத்தெழுநூற் றோர்நாற்பான்
தப்பா சகாத்தம்வெகு தான்யவரு டத்தின்வரும்
அற்பிசிபத் தொன்பதிலே யண்டருல கம்புகுந்தீர்
முப்பதிவாழ்த் தேத்துஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 16

ஊனிறந்த மெய்யா யொளியிறந்த நாட்டமுமாய்
வானிறந்த பைங்கூழாய் வாடிமனு வோரடக்கப்
பூனிறைந்த செய்யலுகாப் போதுகபுர் புக்கிய கோன்
மூனிறைந்த செங்கை ஜமால் முஹம்மதொலியுல்லாவே. 17

தீதுங்கலியும்வரு தீங்குமணு காமலிருட்
போதுங் கபுறில் மணம் பொங்கவிர விற்குறுஆன்
ஓதுமொலி யோங்கவுல கும்பர்பணிந் தேத்துமநு
மூதாருட் பெற்ற ஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 18

பூமீதி லும்மைப் பொருந்துகிளை வாள்கவிப்பால்
நாமீதி லென்று நடத்தினோர் வாழ்கமகு
தூமீதி னுங்கிருபை தோன்றவெவ ருக்குந்துஆ
மூமினீர் செய்க ஜமால் முஹம்மதொலி யுல்லாவே. 19

ஊர்வாழி வாழியுற புன்முறையுத்தமத்தீ
னோர்வாழி செய்கு ஜமா லுத்தீன் துஆக்கபுலா
யோர்வாழி யும்பரிம்ப ரேகமுசு லீமுமீன்
நீர்வாழி வாழியிந்தநீள்புவியும் வாழியவே. 20

இன்னிசை முற்றிற்று.

ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் சரிதை.

இதில் ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் பிறப்பும் குழந்தை பருவமும் அவர்கள் மௌலானா ரூம் அவர்களை சந்தித்ததும், இருவர்களுக்குமுள்ள சம்பந்தமும், ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்கள் கொலை யுண்டதும் விபரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களின் குணாதிசயங்களும், அவர்களின் உபதேசங்களும் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா. 10

ஹஸ்ரத் ஷய்க் பூஅலி கலந்தர் அவர்களின் சரித்திர சுருக்கம்.

இப்புஸ்தகத்தில் ஹஸரத் ஷெய்க் 'பூஅலிகலந்தர் ஷர்புத்தீன் பானிபத்தி (றஹ்) அவர்கள் பிறந்ததும், அவர்கள் நகர வாசத்தை வெறுத்து காடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் போய் இறைவனது தியானத்தில் மூழ்கியதும், அவர்களுக்கு முர்ஷித் (குரு) ஹஸ்ரத் ஸெய்யிதினா ஆஷிக் குதா (றஹ்) அவர்களின் தரிசனம் வாயப் பெற்றதும் அவர்களின் மஹத்தான கராமத்துகளும், அவர்களின் வபாத்தும் அவர்கள் பேருக்கு ஓதப்படும் "ஸெஹமனி பாத்திஹா"வின் விபரமும் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா. 4

PRINTED AT SHAHUL HAMEEDIA PRESS, MADRAS.

முரீது உபதேசம்.

இதில் அடங்கி உள்ள விஷயங்களாவன:—உண்மை பகீர்கள் யார்? இராதத்—முரீத்—முருதத் விபரம், முரீத் என்பவர் யார்? தஸவ்வுப் விபரம், முரீதின் ஆரம்ப நிலை, ஷேக் சன்னிதானத்தில் முரீதின் மரியாதை, முரீதுக்கு ஷைக் ஆதரவு, சமா என்னும் புகழ் பாடக்கச்சேரி விபரம், முரீதுக்கு பீர்ஸாஹிப்பிடம் இருக்க வேண்டிய பயபக்தி, முரீதுக்கு ஷைக் ஸாஹிபின் உபதேசப் பயிற்சி விதம், சகோதர வாஞ்சையும் ஏனைய பழக்க உபசாரங்களும், அந்நியர் சேர்க்கை, செல்வந்தர் சேர்க்கை, பகீர்களுடன் சேர்க்கை வைத்தல், பகீர் சாஹிபின் எளிமைச் சிறப்பு, பகீரும் சுவால் செய்தலும், பகீர் சுகானுபவ ஒழுக்கம், பகீர் சாப்பாட்டு ஒழுக்கங்கள், தோழருடன் உபசார முறை, பிள்ளை குட்டிகளுடன் பகீரின் பழக்காசார முறை, பிரயாணத்தில் பகீர்கள் எவ்வாறு ஒழுக வேண்டும், பகீர் சாஹிபு இராகம் செவியுறுதல், முஜாஹிதா (தவப்பயுத்தம்) விபரம், முஜாஹிதாவின் தாத்பரியம், முஜாஹிதாவை பூர்த்திக்கும் அம்சங்கள், ஆண்டவன் மஃரிபத், ஷைத்தானைப் பற்றிய எச்சரிக்கை, நப்ஸ் எச்சரிக்கை, ஆண்டவன் பயபக்தி, மஹான்களின் பழக்க ஆசாரங்கள், தவக்கல் என்னும் நம்பிக்கை, நற்குண சிலங்கள், ஆண்டவன் சந்நிதானத்தில் நன்னடத்தை, ஷுக்ரு (நன்றி) விபரம், ஸப்று விளக்கம், ரிஜா (சம்மதம்) உண்மை விளக்கம், பரிசுத்தம், தௌபாச் செய்தல், இராக்கால வணக்கம், நபி பெருமானாரின் இராத் தொழுகை, தனிமையில் உபதேசித்தல், உபதேச ஷரத்துகள், நப்ஸும் ஆத்மாவும், தங்கள் ரியாஜத், குத்பு நாயகத்தின் துஆ, மதக்கல்வி முதலியவைகளை விரிவாய் விபரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் இப்புத்தகத்தை வாங்கி படித்து பிரயோஜன மடைவது அத்தியாவசியம்.

இதன் விலை ரூபா. 1-8-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.